9147

உ

நாவலப்பிட்டி

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

# மஹா கும்பாபிஷேக மலர்

23-1-67.

நாவல் நகரின் மத்தியில் பெருமையுடன்

தங்கட்கு தேவையான சகல நவீன வசதிகளுடனும், ஆரோக்கியமுடனும் வெளியூர் உள்ளூர் பிரயாணிகளுக்கு வேண்டிய வசதியளிக்கப்படுவதிலும் அநுபவம் நிறைந்த சிறந்த சிப்பந்திகளைக் கொண்டு சிறந்தமுறையில் சுத்தமாகத் தயார் செய்யப்பட்ட ருசிமிக்க உணவு, சிற்றுண்டி, காபி, டீ இவைகளுக்கு தலைசிறந்து, முதல்ஸ்தானம் வகித்து, இணையற்று திகழும்

"போஜன சாலை"

இன்று ஸ்ரீ முத்துமாரியம்பாள் கும்பாபிஷேக வைபவத்தை முன்னிட்டு விஷேசமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது என்பதை நேயர்களுக்கு இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

# மோஹன விலாஸ்

8, அம்பகமுவ வீதி நாவலப்பிட்டி.

---

Grams: 'Batcha Saibo' Phone: 221

The Leading Estate Suppliers in the Country

## *W. E. M. Batcha Saibo & Company.,*

PROP: P. T. RAMAKRISHNA & CO.

Hardware Merchants, Rice Dealers Forwading Agents & Estate Suppliers

NO. 3, KOTMALE ROAD - NAWALAPITIYA.

---

# P. T. RAMAKRISHNA & CO.,

No. 8, Ambagamuwa Road, Nawalapitiya. Phone: 253

**General Merchants, Estate Suppliers Commission Agent, Labour Pay Supplier & Wholesale Dealers in Rice, Flour and Food Stuffs.**

இல்லாள் விரும்ப - விருந்தினர் மகிழ - இல்லம் சிறக்க

**எவர் சில்வர் பாத்திரங்களைப் பாவியுங்கள்**

*வேண்டிய வகைகளில் விலை சகாயமாகக் கிடைக்கிறது.*
*மிக உறுதியும் வெள்ளிபோல் பிரகாசமும் கொண்டது.*

மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு,

*மத்திய மாகாண ஏகவினியோகஸ்தர்கள்:*

**ஜெகஜோதி அன் கோ.,**

**14, திருக்கோணமலை வீதி, கண்டி.**

*தொலைபேசி: 7281* — *தந்தி: ''ஜெகஜோதி''*

---

**வீட்டுப்பாவனைக்கு தேவையான**

*அலுமினியப் பாத்திரங்கள், எனாமல் பேசன், கோப்பை வகைகள், கண்ணாடி பாத்திரங்கள், முடி வகைகள், சில்வர் சாமான்கள், பித்தளைப் பாத்திரங்கள்*
*— மற்றும் —*
*சாப்புச் சாமான்கள் முதலியவற்றை*
*சிறந்த முறையில், குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள*
*இன்றே விஜயம் செய்யுங்கள்!*

ஒருமுறை விஜயம் செய்தால் மறுமுறையும் விஜயம் செய்யத்தூண்டும் வகையில் உங்களுக்கு தேவையான பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.

*ஒருமுறை விஜயம் செய்து உண்மையை உணருங்கள்!*
உங்கள் திருப்தியே எங்கள் திருப்தி.

**Jothy Stores**
14, Ambagamuwa Rd.,
Nawalapitiya.

**ஜோதி ஸ்டோர்ஸ்**
14, அம்புகமுவ ரோட்,
நாவலப்பிட்டி.

*நம்பிக்கை! நாணயம்!!*

**நாகரீக தங்க நகைகளுக்கு**

சிறந்த இடம்

எவர் சில்வர் பாத்திரங்கள்
தங்கவேலைக்குரிய
ஆயுதச் சாமான்கள்

சகாயமான விலையில்
கிடைக்கும்.

## தங்கமாளிகை

22, மெயின் வீதி,

**அட்டன்.**

தொலைபேசி: 319

## C. W. E. பிடவைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
விற்பனை செய்பவர்கள்.

# சண்முகம்

## ஸ்டோர்ஸ்

69, மெயின் வீதி,
ஹட்டன்.

தந்தி: சண்முகம்ஸ் போன்: 418

**பருத்தி-பட்டு சாரிகள்**
**சேட்டிங்-சூட்டிங் துணிகள்**
**சாரங்கள்**
மற்றும் பல பெற்றுக்கொள்ளலாம்.

## *K. S.*

## *Kasippillai & Son,*

GENERAL MERCHANT.

DEALERS IN:

★ **Jaffna Best Tobacco**
★ **Cigars**
**&**
★ **Oilmanstores.**

**No. 80 A, Main Street,**
**HATTON.**

T'phone: 371

For your

# Estate Tools

**Try at**

## *E. Mohamed Cany Saibo & Co.*

No. 98, 99, MAIN STREET,
HATTON.

Phone: 252

# வரவை எதிர் நோக்குகின்றோம்!

*அணங்கையரின் அழகை அற்புதப் படுத்துவது முருகன்ஸ் ஆடைகள்!*
*ஆடவரின் அழகை அதிகப் படுத்துவது முருகன்ஸ் ஆடைகள்!!*
*சிறுர்களின் அழகை சீர்படுத்துவது முருகன்ஸ் ஆடைகள்!!!*

## ★ வாழ்விலே ஒருநாள் மணநாள்! வருடத்திலே ஒருநாள் திருநாள்!! ★

*இவ்வையகம் போற்றும் இந்நாட்களைச் சிறப்புறச் செய்பவை ஆடைகள். கண்ணைப் பறிக்கும் ஆடைகளை கருத்திற்கிசைந்த வகைகளில், காலத்திற்கேற்ற முறையில் தெரிவு செய்யுங்கள்.*



**மங்கையர்களுக்கான:**

x மணிப்புரி x பட்டு x காஸ்மீர் x டெக்கா x ஜோர்ஜட் x நைலான் சாரிவகைகளும் x சீத்தைகளும் x சில்க் வகைகளும்,

**ஆடவர்களுக்கான:**

X சேட்டிங் X சூட்டிங் X வேட்டிகள் X சாரங்கள் X சில்க் வகைகள் X ரெடிமேட் கால்சட்டைகள், கமிஸ்களும்

**சிறுர்களுக்கான:**

o பள்ளிக்கூட யுனிபாம் o கமிஸ்கள் o கால்சட்டைகள் o சொக்ஸ்கள் o ரெடிமேட் சூட்கள் o கவுன்களும்

**இதர வெவ்வேறு C. W. E. பிடவைகளும்**

*உடனுக்குடன் தருவித்து ஆதரவாளர்களை திருப்தி செய்த ஸ்தாபனம் இது ஒன்றே.*

*ஒருமுறை விஜயம் செய்து உண்மையை உணருங்கள்.*

**உங்கள் திருப்தியே எங்கள் திருப்தி!**

# ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

*(குடும்ப பிடவை ஸ்தாபனம்)*

11, கம்பளை வீதி நாவலப்பிட்டி. போன்: 338

*Distributors for:*

C. I. C. Paints

&

Masconite Asbestors Sheets

## ESTATE SUPPLIES AGENCY.,

19, Gampola Road NAWALAPITIYA

---

# RADHAS

*1 a, Kotmale Road, Nawalapitiya.*

DEALERS IN:

TEXTILES, FANCY GOODS, OILMANSTORES.

உயர்ந்த பிடவைகட்கு உன்னத ஸ்தாபனம்

# ராதா ஸ்டோர்ஸ்

நிர் 1, கொட்மலை ரோட், நாவலப்பிட்டி.

அன்பர்களே!

நாவல் நகரில்

நம்பிக்கை

நயம்

நாணயம்மிக்க

ஸ்ரீ லங்கா ஸ்டோர்ஸில்

சாப்புச் சாமான்கள், எவர்சில்வர் பாத்திரங்கள்
பாடசாலைப் புத்தகங்கள்

குறைந்த விலையில் சிறந்த பொருள்களாக வாங்கி பயனடையுங்கள்

# ஸ்ரீ லங்கா ஸ்டோர்ஸ்

## 29, கொத்மலை வீதி, நாவலப்பிட்டி.

உங்களுக்குத் தேவையான

ஜவுளி தினுசுகளும்

மற்றும் றெடிமேட் ஆடைகளும்
சாப்பு சாமான்களும் குறைந்த
விலையில் மொத்தமாகவும் சில்லறையா
கவும் பெற்றுக் கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

## செ ல் வ ம் 'ஸ்

7, வோகன்ஸ் பார்க் வீதி
நாவலப்பிட்டி.

உங்கள் அவசர

தேவைகளுக்கு

எப்போதும்

வெளியிடங்களுக்கும் சென்று புகைப்
படம் எடுக்க

## வேல்ஸ் ஸ்ருடியோ

13, கம்பளை வீதி,
நாவலப்பிட்டி.

# ஸ்ரீ முருகன் ஜுவல்லரி

47, கொத்மலை வீதி, நாவலப்பிட்டி.

எங்களிடம் எல்லாவிதமான பவுன் தங்க நகைகளும் மிக நேர்த்தியாகவும் அழகாகவும், நம்பிக்கையுடனும், உத்தரவாதத்துடனும் புதுவிதமான டிசைன்களில் செய்து கொடுக்கப்படும்.

ஆடர் வேலைகள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

*Sri*
## Murugan Jewellery

*47, KOTMALE ROAD,*
*NAWALAPITIYA.*

---

*உரிமையாளர்:*

எஸ். ஏ. அமீர் பாச்சா

# திறீ சன்ஸ் பீடி

இன்டஸ்ரீஸ் ஸ்தாபனத்தார்
**மக்களுக்கு**
மகிழ்ச்சியுடன் தருவது.
காரம், மணம், குணம் ஒருங்கே அமைந்த திறீ சன்ஸ் பீடி.

21/5, கம்பளை பின் வீதி,
நாவலப்பிட்டி.

*ஆபீஸ்:*
65, கொத்மலை வீதி,
நாவலப்பிட்டி.

## பரமானந்தம் ஸ்டோர்ஸ்

44, கொத்மலை வீதி,
நாவலப்பிட்டி

அலுமினிய பித்தளை எவர்சில்வர்
பாத்திரங்கள்

குழந்தைகள்குதூகலிக்கவிளையாட்டுச்
சாமான்கள்

நாளாந்த பாவனைக்குத் தேவையான
வீட்டு உபகரணங்கள்

மற்றும் சாய்ப்புச் சாமான்களும்
மொத்தமாகவும்.சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்



புகைப்படத் துறையில் புதுமையுடன்
எவ்வகைப் படங்களையும்
சிறந்த முறையில்
எடுக்க
நாவலப்பிட்டியில் ஒரே இடம்

## "லக்ஷ்மி போட்டோ"

ஒன்றே.

*Visit*

## *"Lakshmi Foto"*

FOR BEST PHOTOGRAPHY.

53, கொத்மலை வீதி, நாவலப்பிட்டி



## அழகும் சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த சுத்தமான பவுன் தங்க ஆபரணங்கள், ரேடியோக்கள், எவர்சில்வர் பாத்திரங்கள்

ஆகியவைகளுக்கு

# தங்க மாளிகை

52, கொத்மலை வீதி
(புதிய கட்டிடம்)
நாவலப்பிட்டி.

*Artistic & Beautiful Jewellery In Pure Soverign Gold Radio Eversilver*

*Contact*

## *Thangha Maligai*

52, KOTMALE ROAD, (New Building) NAWALAPITIYA.

# ஜெயராம்ஸ்,

*ஜவுளி அன் நகை அடைவு வியாபாரம்*

## 23, கம்பளை ரேட் ::: நாவலப்பிட்டி

எங்களிடம் :-

இலங்கை, வெளிநாட்டு கைத்தறி மில் ஜவுளிகளில்

**சாரி, வேஷ்டி, சேட்டிங், பேப்பிரிக்**

மற்றும் உங்களுக்கு தேவையான பிடவைகளும்

**நிர்ணயமான விலைக்கு கிடைக்கும்,**

நகை அடைவு தொழிலும் உங்களின் நம்பிக்கைக்கு பொறுப்பாக நடக்கிறதால் எங்கள் ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யுமாறு அன்புடன் அழைக்கிறேம்.

---

*உயர்ந்த பிடவைகட்கு*
*உன்னத ஸ்தாபனம்!*

## "பொரவியாஸ்"

**C. W. E. பிடவைகள் விற்க**
**உத்தரவு பெற்ற**
**ஜவுளி வர்த்தகர்**

37, கம்பளை வீதி, நாவலப்பிட்டி.

# PORAVIAS

*DEALER FOR*

## C. W. E. TEXTILES

37, Gampola Road,
NAWALAPITIYA

---

## ஸ்ரீ சண்முக லாட்ஜ்

*அறுசுவை உண்டிக்குச் சிறந்த இடம்.*

★ சாலச் சிறந்த உணவு
விதம் விதமான சிற்றுண்டிகள்
உற்சாகம் தரும் குளிர்பானம்

இத்தனையும்
செய்யக் காத்திருக்கிறது.

## இன்றே
## விஜயம் செய்யுங்கள்

★

39, கம்பளை ரோட், நாவலப்பிட்டி.

# சமர்ப்பணம்



அன்னையின் அருளால் பூத்துப் பொலிந்த மலரை அன்னையின் பாத தாமரைகளுக்குச் சமர்ப்பிப்பதில் மகிழ்வடைகின்றோம். உலகம் முழுவதும் அழகு மயம். இறைவன் படைத்த படைப்பு அத்தனையும் அழகேதான். ஆண்டவன் படைப்பில் அழகு இல்லாத இடமேயில்லை.

இந்த அழகைத் தோற்றுவிக்கும் இணையிலாச் சக்தி உடையவள் அன்னை பராசக்தி. அவள் அழகுக்கெல்லாம் அழகாயிருப்பவள். அவளது தூய அழகிலே சொக்கிய பக்தர்கள் பலர். அன்னையின் பேரெழிலில் சொக்கிய அபிராமி பட்டர் அன்னையின் பேரெழிலை வர்ணிப்பதற்கு வார்த்தைகளில்லாது திண்டாடுகிறார்.

''உதிக்கின்ற செங்கதிர்,
உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம்,
மாதுளம்போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி,
மென்கடிக் குங்குமதோயம் - என்ன
விதிக்கின்றமேனி அபிராமி
என்றன் விழுத்துணையே''

நாவலப்பிட்டி அன்பர்கள் எங்கும் நிறைந்த அன்னையின் அழகை ஆலயத்துள் வைத்துப் பார்க்க விரும்பினர். அழகிய அன்னையை அழகிய கோயிலில் குடியிருத்த வேண்டியதுதானே முறைமை. ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் குறைந்த காலத்தில் கூடிய உழைப்புடன் அழகான கோயில் எடுத்தனர். கோபுர வேலைகளின் அழகைப் பார்த்தவர்கள், அன்னையின் அழகையே பார்க்க மறந்து விட்டார்கள். கோபுரத்தில் சிலை ஒன்றைப் பார்த்தவர் தாமும் ஒரு சிலையாகவே நின்றார். அழகிய வர்ணங்களைப் பார்த்து நின்றவர் மாலைக் கதிரவனின் காட்சியை மறந்து நின்றார். கோபுர அழகு இத்தகையதாயின் அதில் குடியிருக்கும் தேவியின் அழகு எத்தகையதாயிருக்கும் என்று பக்தர் பனுவல் பாடினர்.

இத்தகைய தேவியின் அழகை ஒரு சிறிதாவது பக்தர் உள்ளத்தில் பளிச்சிடச் செய்வதற்காகவே இக் கும்பாபிஷேக மலரை வெளியிட்டோம். பக்தர்கள் கட்டுரை தந்தும் விளம்பரம் தந்தும் இந்த மலரைச் சிறப்பித்தனர். அவர்களுக்கெல்லாம் எமது மனமார்ந்த நன்றி. மலரின் முகப்பைப் பார்த்த உடனேயே ஆலயத்தின் அழகை ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது.

இவ்வழகிய வாடாமலரை அன்னையின் பாத தாமரைகளுக்குச் சமர்ப்பிப்பதில்தான் எமக்கெல்லாம் திருப்தி.

23-1-67.

மலர் ஆசிரியர்: திரு. நா. முத்தையா

அச்சுப் பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி.

பொருளடக்கம்

# இம் மலரில் பொதிந்துள்ள பக்திக் கருவூலங்களின் தலைப்புக்கள்


1 நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோவில்
2 மாமுத்து மாரியன்னையே!
3 மாரியம்மன் விளக்கம்
4 அன்னை வணக்கம்
5 இறை வழிபாடு
6 மாரி அம்மனும் மகா அபிஷேகமும்
7 திருத்தலப் பயணம்
8 அம்பாளின் அருள் நோக்கு
9 சக்தியின் மகத்துவம்
10 பக்தியே ஆண்டவனைப் பிடிக்கும் வலை
11 ஆலயத்தின் அற்புதங்கள்

# ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
# திருச்சபை அங்கத்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | உயர் திரு | C. சந்தனம் | தலைவர் |
| 2 | ,, | P. T. கிருஷ்ணசாமி | தனாதிகாரி |
| 3 | ,, | இ. பெர். துரைசாமி | காரியதரிசி |
| 4 | ,, | M. R. T. ராஜுபிள்ளை | கமிட்டி மெம்பர் |
| 4 | ,, | S. மகாலிங்கம்பிள்ளை | ,, |
| 6 | ,, | நா. முத்தையா | ,, |
| 7 | ,, | S. பொன்னம்பலம் | ,, |
| 8 | ,, | K. கணேசன் | ,, |
| 9 | ,, | K. வீரலிங்கம் ஆச்சாரி | ,, |
| 10 | ,, | S. செல்வராஜ் | ,, |
| 11 | ,, | P, சிதம்பரம்பிள்ளை | ,, |

## முக்கிய திருப்பணி உதவியாளர்கள்

| | |
|---|---|
| C. தேவராஜ் | அவர்கள் |
| வ. முத்துப்பழனிதேவர் | ,, |
| K. முத்துக்கிருஷ்ணன் | ,, |
| K. P. L. கருப்பையாபிள்ளை | ,, |



ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான கட்டிட சிற்ப ஓவியக் கலைஞர்களைப் படத்தில் காண்க. திருவாளர்கள்: 1. ச. முத்துராமபிள்ளை, 2. கறுப்பையா, சேர்வை, 3. நா. தங்கவேல், 4. வீ. நாகலிங்கஸ்தபதி, 5. தர்மலிங்கம்.

# நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள்

# திருக்கோவில்

(நா. முத்தையா - ஆத்மஜோதி)

நாவலப்பிட்டி நகரத்தின் நடுவிலே ஒரு முச்சந்தி உண்டு. இந்த முச் சந்தியைக் கடவாமல் எவரும் நாவலப் பிட்டியை அறிந்துவிட முடியாது. அம்புகாமத்திலிருந்து வரும் வீதியும், கம்பளையிலிருந்து வரும் வீதியும், கொத்மலையிலிருந்து வரும் வீதியுமாகிய மூன்றும் ஒன்று சேரும் இடமே அந்த முச் சந்தியாகும். முச்சந்தியிலிருந்து கொத் மலை வீதிவழியாகச் சென்றால், வலது பக்கத்தில் கதிரேசன் கோயில் தரிசன ம் சிறிது தூரம் சென்றபின் இடது க்கத்தில் ஸ்ரீ முத்துமாரியம்பாள் தரி முறும் கிடைக்கும். துட்டகைமுனு தைக்குப் பயந்து கொத்மலை நாட் கு ஓடி ஒளித்ததாகச் சரித்திரம் றுகின்றது. பாவத்திற்குப் பயப்படு பவர்கள் கொத்மலை வீதிக்குத் தினமும் ஓடி ஓடிச் செல்வார்கள். ஏன்? கதி ரேசப் பெருமானிடமும் ஸ்ரீ முத்துமாரி யம்பாளிடமும் தமது கஷ்டங்களை எல் லாம் சொல்லித் தமது குறைகளைப் போக்கிக் கொள்வதற்காக.

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோ யிலின் வாசலிலே நின்று பார்த்தால் வீதிக்கு எதிர்ப்பக்கத்திலே அரசாங்க வைத்தியசாலைக் கட்டிடங்கள் நிமிர்ந்து நிற்பதைக் காணலாம். வைத்தியசாலை யின் முன் விறாந்தையில் நின்று பார்ப் போருக்கு அம்பாளின் திருக் கோலக் காட்சி அற்புதமாகத் தெரியும். வைத் திய அதிகாரியைப் பார்ப்பதால் உடல் நோயையும் அதே சமயத்தில் அம்பா ளின் திருக்காட்சியைப் பார்ப்பதால் உயிர் நோயையும் நீக்கிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. அம்பாளை மறந்து வைத்தியரையே நினைத்துக் கொண்டி ருக்கும் நோயாளிகளுக்கும், தமது தொ ழிலையே மறந்திருக்கும் மக்களுக்கும் அசையாமணி ஓசை அம்பாளின் நினை வை உண்டாக்குகின்றது. சாதி சமய பேதமற்று வைத்தியசாலைக்கு எவ்வாறு மக்கள் தமது நோயைத் தீர்க்கச் செல் கின்றார்களோ அதேபோல எல்லாச்சா தியார்களும் எல்லாச் சமயத்தார்களும் தமது வினையைப் போக்க அம்பாளின் திருமுன்னிலையில் கூடுவதைப் பார்க்க லாம்.

அன்னை எல்லாருக்கும் அன்னை தானே. ஒரு குழந்தை வேறு சமயத் திற்குப் போய்விட்டால், வேறு இனத் தில் விவாகம் முடித்து வீட்டால் அக் குழந்தையை அன்னை தள்ளி வைத்து விடுவாளா? அன்னையின் வாசலிலே நின்று அங்கு வந்து வழிபாடு ஆற்றிச் செல்லும் மக்களைப் பார்த்தால், சம ரச சன்மார்க்க நெறியை எவராவது, உணராமலிருக்க முடியாது. காரணம்: ஒவ்வொருவரும் அம்பாளைத் தமது அன்னையாக உணர்ந்து கொள்வதும், அம்பாள் எல்லாரையும் தமது குழந்தை களாகக் கருணை பாலிப்பதுமேயாகும்.

அன்னை பராசக்தி எங்கும் நிறைந் தவள். எங்கும் நிறைந்த அன்னையைத் தமது உள்ளத்திலே சொந்தமாக்கிக் கொள்வதற்காகத் திருக் கோயில் எடுத்தனர். இன்றுவரை இருந்த கோயில் இருபத்தைந்து பேர் களை மாத்திரம் அடக்கக் கூடியதாய் இருந்தது. அன்னையின் கருணையினாலே பக்தர்களுடைய உள்ளம் நெகிழ்ந்து விரிந்தது. அம்பாளை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து

நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து வழிபடப் பெருங்கோயில் இல்லையே எனப் பக்தர் கூட்டம் ஏங்கியது. அன்னை வழி காட்டினுள். வானளாவ நிமிர்ந்த கோபுரத்தோடு இன்று திருக் கோயிலை தேவஸ்தானத்தைக் காண்கின்றோம். உள்ளம் பூரித்துப் போகின்றோம். அப்பூரிப்பிலே ஒரு கணப்போது அன்னையுடன் இணைந்து விடுகின்றோம்.

இத்தகைய அம்பாளின் தேவஸ்தான வரலாற்றை இன்றுள்ள சந்ததியினர் எல்லாரும் அறிய மிகமிக ஆவலாய் இருக்கின்றனர். அம்பாளின்அருட்துணை கொண்டு அறிந்தமட்டில் கூறுவோம்.

மூன்று தலைமுறைகளுக்கு முன் முன்னேக்கிச் செல்வோம். அப்போது நாவலப்பிட்டியில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில கடைகள். பெரிய மாடிகள் அமைந்த கட்டிடங்கள் அல்ல, சிறுச் சிறு கடைகள். நாவலப்பிட்டி என்பது புகையிரத ஊழியர்கள் அதிகமாயுள்ள ஒரு பட்டினம் என்று அந்தக் காலத்துப் பூமிசாஸ்திரப் புத்தகத்தில் படித்த ஒரு ஞாபகம். புகையிரத என்சின்களும் புகையிரத ஊழியர்களும் இளைப்பாறுமிடமாகவும் மாறுமிடமாகவும் அமைந்திருந்ததுதான் நாவலப்பிட்டிப் பட்டினம்.

ஒருமுறை ஒரு வயோதிபர் நாவலப்பிட்டிக்குவந்தார். அவர் சக்திஉபாசகர். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு யாத்திரை மார்க்கமாக வந்தவர். அங்கங்கு தங்கி அன்பர்களின் உதவியுடன் யாத்திரை செய்து கொண்டிருந்தார். நாவலப்பிட்டிக்கு வந்ததும் உடல் நோய் அதிகமாகியது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தான் உபாசித்து வந்த அம்பாளின் மூர்த்தியை ஆஸ்பத்திரியில் வைத்திருக்க முடியாது என்பதை அறிந்தார். வைத்தியசாலைக்கு எதிரே அப்பா ஆசாரியாருடைய வீடு தெரிந்தது. அப்பா ஆசாரியார் இளகிய உள்ளம் படைத்தவர். சாதுக்களை மனமுவந்து ஆதரிப்பார். அத்தகையவரிடம் அந்த வயோதிபர் அம்பாளின் மூர்த்தியை அடைக்கலமாகக் கொடுத்து விட்டு வைத்தியசாலையில் சென்று படுத்துக் கொண்டார். அப்பா ஆசாரியாருக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அம்பாளே தனது வீடு தேடி வந்துள்ளதாக உணர்ந்தார். தினமும் பூவைத்து வழிபாடு செய்து வந்தார்.

வைத்தியசாலையில் உடல்நலம் பெற்று வயோதிபர் புறப்பட்டார். நேராக அப்பா ஆசாரியார் வீட்டுக்குச் சென்றார். அம்பாள் புதுப் பொலிவுடன் விளங்குவதைக் கண்டார். ஆசாரியார் அம்பாளை அன்பினுலே தமதுடைமையாக்கிக் கொண்டதை உணர்ந்தார். அப்பா ஆசாரியாருடைய உள்ளத்தில் உள்ள கருத்தை வயோதிபர் வெளிப்படுத்தினர். "அம்பாளை நீங்களே வைத்திருங்கள். அவள் உங்களோடு இருக்கத்தான் விரும்புகிறுள்" என்றார். அப்பா ஆசாரியாருக்குக் காதுகளையே நம்ப முடியவில்லை. கண்கள் ஆனந்த பாஷ்பம் சொரிந்தன. ஆனந்த மிகுதி சொற்களை வரவிடாது தொண்டையை அடைத்துக் கொண்டது.

வயோதிபர் மெல்லமாக எனக்கொரு உதவி செய்ய வேண்டும் எனக் கேட்டார். "இந்தக் கட்டையை இந்தியாவில் கொண்டு சென்று சேர்க்க வேண்டும். அதற்கு உதவி செய்யுங்கள்" என்றார். உடனே அப்பா ஆசாரியார் அவருக்கு இந்தியாவுக்கு ரிக்கெற்றும் எடுத்துக் கொடுத்து கையில் நாற்பது ரூபாவும் கொடுத்தார். பெரியவர் இந்தியா சென்று சேர்ந்தார்.

அப்பா ஆசாரியாருக்குப் பொருளுதவி செய்தவர் முத்துக்குமாரு என்ற சைவராவர். இவர் ஒரு வடை வியாபாரி. இருவரும் சேர்ந்து பெயிலிறேட்டில் ஒரு வீட்டை ஒன்றரை ரூபா கூலிக்கு அமர்த்தினர். அதில் அம்

# சந்திரா ஸ்டோர்ஸ்

**331, மெயின் வீதி, டிக்கோயா.**

மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

- ★ வெங்கல அலுமினிய பாத்திரங்கள்
- ★ எவர்சில்வர் பாத்திரங்கள்
- ★ சாப்புச் சாமான்கள்
- ★ பாடசாலை புத்தகங்கள்
- ★ பாட்டா சப்பாத்துக்கள்
- ★ ரப்பர் வளையல் தினுசுகள்

**மலிவானவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.**

---

## *Pr, Rengasamy Pillai & Co.,*

C. W. E. பிடவைகள் விற்க உத்தரவு
பெற்ற ஜவுளி வர்த்தகர்

## பெரி. ரெங்கசாமி பிள்ளை அன் கோ

**19, ஹட்டன் வீதி,**
**இனிகத்தேனை**

---

எங்களிடம் பாடசாலைப் புத்தகங்களும், டின் உணவு வகைகளும் சாப்புச் சாமான்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

# ரவி அன்

## கம்பெனி

39, கொத்மலை வீதி
நாவலப்பிட்டி

## மணியம் 'ஸ்

## ஸ்பெசல் சுருட்டை

வாங்கி பாவியுங்கள்

மற்றும் புகையிலை வெற்றிலை பாக்கு சாய்ப்பு சாமான்கள் சகாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

**ம. க. சுப்பிரமணியம்**

34, கொத்மலை வீதி,
நாவலப்பிட்டி

# க.
# கணேசன்

பாட்டாளி முதல் பணக்காரர் வரை எல்லோரும் புகைப்பது கணேசன் சுருட்டு ஒருமுறை வாங்கி உபயோகித்தால் உண்மை விளங்கும்.

15, கொத்மலை வீதி,
நாவலப்பிட்டி

## Shanthi Stores,

Dealers In:

***Foot-Wear***
***Fancy Goods***
***Oilman Stores***
***Etc.***

## சாந்தி ஸ்டோர்ஸ்

6, கொத்மலை வீதி,
நாவலப்பிட்டி

எங்களிடம் உங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் மற்றும் சகலவிதமான சாப்புச் சாமான்களையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாவல் நகரில் உள்ள ஒரே ஒரு ஸ்தாபனம்

பலசரக்கு மாளிகை

## தனலெட்சுமி டிரேடர்ஸ்

15, அம்பகமுவ வீதி,

நாவலப்பிட்டி போன்: 224

*தலைமைக்காரியாலயம்:*

தனலெட்சுமி ஸ்டோர்ஸ்
தொளஸ்பாகை

உயர்ந்த பிடவைகட்கு உன்னத
ஸ்தாபனம்

## நா. க. காளியப்பபிள்ளை அன் கோ

14, கொத்மலே வீதி, நாவலப்பிட்டி

★

C. W. E. பிடவைகள் விற்க உத்தரவு
பெற்ற ஜவுளி வர்த்தகர்

போன்: 327

## K. சிதம்பரம்பிள்ளை

C. W. E. பிடவைகள் விற்க உத்தரவு
பெற்ற ஜவுளி வர்த்தகர்

நகை ஈடு பிடிக்குமிடம்

★

16, கொத்மலே வீதி நாவலப்பிட்டி.

போன்: 339.

## N. K. R. STORES

17, AMBAGAMUWA ROAD,
NAWALAPITIYA

யாழ்ப்பாணம் திறம் சுருட்டுவகைகள், திறம் புகையிலேகள், திறம் நல்லெண்ணெய், வெற்றிலே பாக்குவகைகள் சாய்ப்புச் சாமான்கள் மற்றும் பொருள்கட்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

மறவாதீர்கள்! தவறுதீர்கள்!!

## N. K. R. ஸ்ரோர்ஸ்

Prop; என். வி. பொன்னுத்துரை
நாவலப்பிட்டி

''நாவல் நகரில் நயம் காண வாரீர்''

எங்களிடம் திறம் செ.தி. கனகலிங்கம் சுருட்டுகள் யாழ்ப்பாணம் திறம் நல்லெண்ணெய் புகையிலே பீடி வகைகளும் வெற்றிலே பாக்கு கணக்கு புத்தகங்கள் யாவும் சகாயமானவிலேயில் கிடைக்கும்.

## இ. இராசநாயகலிங்கம் அன் பிறதர்

7, அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி

# கொத்மலே
# ஸ்டோர்ஸ்

★

நகை ஈடு பிடிக்குமிடம்

★

21, கொத்மலே வீதி,

நாவலப்பிட்டி.

# Vijaya Stores

7, Gampola Road, Nawalapitiya

Dealer for C, W, E, TEXTILE

உயர்ந்த பிடவைகட்கு உன்னத
ஸ்தாபனம்

# விஜயாஸ்

C. W. E. பிடவைகள் விற்க உத்தரவு
பெற்ற ஜவுளி வர்த்தகர்

7, கம்பளை வீதி, நாவலப்பிட்டி

# S. RAMALINGAM,

12, Gampola Road,
NAWALAPITIYA

# சி. இராமலிங்கம்

12, கம்பளை வீதி, நாவலப்பிட்டி.

எங்களிடம் சகலவிதமான புடவைத்
தினுசுகளும், சாப்புச் சாமான்களும்,
ஆங்கில மருந்து வகைகளும், கோழித்
தீன் இன்னும் பலவும் மலிவானவிலைக்
குப் பெற்றுக்கொள்ளலாம்.

# நியூ அசோகபவான்

11, கொத்மலே வீதி, நாவலப்பிட்டி.

அறுசுவை உண்டிக்குச் சிறந்த இடம்

சாலச் சிறந்த உணவு

உற்சாகம் தரும் குளிர்பானம்

வித விதமான சிற்றுண்டிகள்

இத்தனையும் செய்யக் காத்திருக்கிறது

# மாரியம்மன் விளக்கம்

(கவியோகி, மஹரிஷி சுத்தானந்த பாரதியார்)

நாம் பார்க்கும் சூரியன் ஒன்றே, அதன் கதிர்கள் பல; அவை சூரியனுடைய சூட்டையும் ஒளியையும் பரப்பி உலகை ஆக்கியளிக்கிறது. அதுபோலவே கடவுள் ஒருவர்; அவரது அருட்சக்தி உலகில் ஐந்தொழில் புரிகிறது. ஆக்கும்போது அயன், காக்கும்போது திருமால், நீக்கும்போது அரன், மறைக்கும்போது மகேசன், அருளும்போது சதாசிவன், தானே தானுயிருக்கும் போது சுத்தசிவன் என்று கடவுளுக்குப் பெயர் வடிவுகள் ஊகிக்கப்படும். இத்தொழில்களை நிறைவேற்றும் தெய்வ சக்திகளுக்கு வாணி, இலக்குமி, காளி, மகேசுவரி, மனோன்மணி, சுத்தசக்தி என்று பெயர் வழங்கும்.

பெயர் வடிவாதியதோர்
பேதம்கடந்த
உயர்பொரு ளொான்று
உண்டென்றுணர்.

பெயர் வடிவ பேதங்களை யெல்லாம் கடந்த பரம்பொருள் சுத்தசக்தி பரமாத்மனே.

மாரியம்மன் என்றால் வான்மாரியைத் தந்து உலகுயிர்களை வாழ்விக்கும் பராசக்தி - கருணையே வடிவான கடவுள் - மழைக்கடவுள். மழை வரண்டபோது மாரியம்மன் விழாக் கொண்டாடிக் கரகம் எடுத்தல் நமது மரபு. ஆனால் மாரியம்மன்பெயரால் ஆடு, மாடு, கோழிகளை அறுத்துச் சமைத்துச் சுவைப்பது வழிபாடு அல்ல; இது பழிபாடு. மாரியம்மனை வழிபடுவோர் இனிய சர்க்கரைப்பொங்கல் வைத்து நிவேதித்து ஏழைகளுக்கு வழங்குக; இளநீர், பால், மஞ்சள்நீர்களால் அபிஷேகம் செய்து மல்லிகை, மருக்கொழுந்து சூட்டிக் குளிர வழிபடுக; நலமுண்டு.

வழிபாடு மூவகையாகும். 1. ஆகம பூசையான புறவழிபாடு, 2. அகமுருகும் தோத்திரம் அல்லது சொல் வழிபாடு, 3. உள்வழிபாடான தியானம்,

பராசக்தியான உலக – கல்யாணி ஒவ்வொருவர் ஆதாரங்களிலும் உறங்குகிறாள். அவளைத் துயிலெழுப்பி மேற்சொன்ன வாணி, லக்ஷ்மி, காளி, மகேச்வரி, மனோன்மணி, சுத்தசக்தியாகிய அருள்வடிவங்களை உபாசிக்கவே இந்தப் பாட்டு பாடப் பெற்றது. இதன் முதல் பாட்டு மகாகுண்டலினி சக்தியை எழுப்புவது. இரண்டாவது பாட்டு அந்தச் சக்தியை உலகெங்கும் காண்பது. மூன்றாவதுபாட்டு ஆர்வமுடன்உபாசிப்பது. நலாவதுபாட்டு ஆத்மதாகம் தீரக் கூவுவது. ஐந்தாவது இருட்குலம் விலகி அருட்சோதி புலரத் தியானிப்பது; ஆறுவது பந்த தொந்தங்கள் விலகி ஜீவ சைதன்யத்தில் சிவமணம் கமழ வாழ்வது. இந்த ஆழக் கருத்தையும் சுத்த சமயோக ரகசியத்தையும் விளக்கும் இந்தப் பாடலே யோகசமாஜத்தின் காலைப்பாட்டு. இதைச் சகல அன்பரும் பாடிப் பயன் பெறுக!

எழுந்திரு கல்யாணி

எழுந்திரு கல்யாணி ஓம் சுத்தசத்தி-எம்
இதயத்தில் உபசாந்த உதயத்தைத்

அழுந்திருள் ஒழிந்திடச் (தூண்டி
செழுஞ்சுடர் பொழிந்தெங்கள்
ஆதார கமலத்தின் மீதேறிப் பொலிந்
(திட

(துரிதம்: ஒவ்வொரு பாசுர முடி
விலும் பாடுக.)

எழுந்திரு ஓம் வாணி -
எழுந்திரு ஓம் லக்ஷ்மி
எழுந்திரு ஓம் காளி - குண்டலிக்கனலே
எழுந்திரு சாந்த மஹேச்வரி தாயே
இதய மனோன்மணி உதயசுந்தரியே

2

விண்முகங் கனிந்தது - விடிந்தது காலை
வீங்கிருள் அகன்றது-தூங்கினகுமுதம்
தண்முகம் அருணத் - தணல் முகமானது
தடங்களில் விரிந்தன - தாமரை யெல்
லாம்

மண்முகம் புதுப்பசும் பொன்முகமாகிட
மங்கலச் செங்கதிர் மலர்ந்ததுவானில்
என்முகம்பார்த்தருள் புரிவதற்கெண்ணி
எழுந்தருள் இத்தினம் இன்பக் கொழு
ந்தே

(எழுந்திரு ஓம் வாணி)

3

ஆர்வமென்னும் சேவல் கூவுதுன்னருளை
அன்புள்ளம்பாடுதுன் - ஆடலின் பொ
ருளைக்
கார்வரக் காணும் - கலாபத்தைப் போ
லுன்
கருணை முகங்கண்டு - களித்ததெங் கண்
ணே
சூரிய ஜோதிசேர் - தாரகை போலுன்
சுடரினில் ஒன்றுகும்-சுகநிலையருளாய்
பாரெல்லாம் உன்முகம் பார்த்திட வரு
ளாய்
பரமசிவானந்தம் பாலிக்குந் திருவே.

(எழுந்திரு ஓம் வாணி)

4

புள்ளினம் வண்டினம் பூமணத்தென்றல்
பூபாளம்பாடியே போற்றினஉன்னைத்
துள்ளின கன்றினம் தாய்மடி யுண்டே
தொண்டருன் பெருமையைத் துதித்
தனர் கூடி
விள்ளரும் ஆனந்தத் தேனமுதாறே
வேகமாய் வந்தாத்ம தாகந் தீர்த்தரு
ளாய்
உள்ளொளி தூண்டிஎம் இலக்காய்
உண்மையை
ஓம்சுத்த பரமாத்ம சக்தியே வணக்
கம்

(எழுந்திரு ஓம்வாணி)

5

இருட்குலத் தீமைகள் இன்றுடன் ஒழிக
இடர்செய்யும் பகைக்குலம் இடமின்
றியழிக
மருட்குல மாயங்கள் வாயிழந் தொழிக
மனமயக்காகிய இனமயகொழிக
பொருட்பெரும் சுத்தான்மப் புதுயுகம்
புலர்க
பொய்ச்சாதி மதவினை பூண்டுடன்
மறைக
அருட்குல வீரர்கள் அன்புடன் பொலிக
அமரானந்தந்தரும் அமுதவூறருளா
ய்)

(எழுந்திரு ஓம்வாணி)

6

பந்தவினை யெல்லாம் சிந்திடப் புரிந்தே
பரம பரிசுத்த யோகப் பயனால்
சிந்தையில் உபசாந்த தீபத்தை யேற்றிச்
சீவசைதன்யத்தைச் சிவ மயமாக்கி
அந்தர தாரைகள் ஐக்கிய மாகும்
அருணகிரணம்போல் அறிவொளிவீசி
வந்தருள்ஆனந்தம்தந்தென்னையாளாய்
வாழிநின்வானருள் வாழியிவ்வுலகே.

(எழுந்திரு ஓம் வாணி

# அன்னை வணக்கம்

[ஏ. கோபாலய்யர்]

அன்னை யார்? உலகிலுள்ள உயிர்களின் அன்னை கடவுளாகிய பரம்பொருள். கடவுளோ ஆணுமல்ல, பெண்ணுமல்ல; எங்கும் நிறைந்தது; எக்காலத்தது; முற்றிலும் இன்பவுருவானது; சிறிதும் மாருதது. இந்த இலக்கணங்களுக்கு ஏற்ப, கடவுள் எவ்விதம் அன்னையாகி, உயிர்களின் பிறவிக்கு காரணமாக முடியும்?

கடவுளும், எல்லா உயிர்களும் ஒன்றே; ஆயினும், தத்தம் நிலையினுல், உயிர்கள் கடவுளினும், பிரிதானதாகத் தோற்றமே மாயை என்னும் கடவுளின் கட்டளைக்குட்பட்ட சக்தி. எவ்விதம்? எங்கும் பரவியுள்ள காற்றும் மூடியுள்ள ஜாடியில் அடைக்கப்பட்ட காற்றும் ஒன்றே; ஆனுல், ஜாடியில் அடைபட்டிருப்பது ஒரு நிலை; ஜாடி உடைந்து அகன்ருல், காற்று எல்லாம் ஒன்றே. அவ்விதமே மாயை என்ற மயக்கத்தாலேயே, மனிதன் தன்னை கடவுள் தன்மையிலிருந்து வேருக காண்கிருன். மாயை அல்லது மயக்கம், மனிதனின் அறிவின்மைக் காரணமான இருள்; அது அவனை ஆட்டி வைப்பது; ஆனுல் அது கடவுளின் அடிமை. இதுவே உயிர்களின் பிறப்பு, செயல், அழிவுக்குக் காரணமானது. இதுவே அன்பாகிய பராசக்தி ஆவாள்.

இருளும், அறிவின்மையும் உயிருக்கு என்று உண்டாகியவை. எனச் சொல்ல வொண்ணுது. ஆனுல் அவைகளை நீக்க வேண்டி, மனிதன் செயல்பட வேண்டும். அதற்காகவே, மேலும் மேலும் பிறப்பு அவனுக்களிக்கப் படுகிறது. ஆசை, ஆணவம் - இவைகளால் தூண்டப்பட்டு மனிதன் செய்யும் செயல்கள் அவனை மீண்டும்மீண்டும் பிறவிக் குட்படுத்தி மீண்டும் மீண்டும் துன்பத்தையே அடையச் செய்கின்றன. இன்பம் சிறிதேனும் பெற்ருலும், அது நிலையற்றும், துன்பத்தை பெருக்குவதும் ஆகிறது. ஆகையால் பிறப்பு, இறப்பு அற்ற கடவுள் நிலையை அடைய அவன் செயல் பட வேண்டின், பராசக்தியின் அருளைப்பெற்று உலகிலுள்ள இன்ப, துன்பங்களைநாடாது, ஆசையையும் ஆணவத்தையும், சினத்தையும், தலை எடுக்க வொட்டாமல் அடக்கி, அழித்து, வாழ்நாள் முழுவதும் அன்னையின் தியானத்தில் ஈடுபடுதல் வேண்டும்.

பரம் பொருளை நினைத்து, மனதை அதில் ஈடுபடுத்தல், மிக மிகக்கடினம். ஏனெனில், கடவுள் உருவற்றது; மனத்திற்கு எட்டாதது. ஆகையால் அன்னையே மனத்தின் கண் நினைக்கத்தக்கவள்; அவளே ஆக்கிக்காத்து அழிப்பவள் ஆவாள். ஆயினும் அவள் அன்னை என்ற காரணத்தால் எல்லையில்லாக் கருணை நிரம்பியவள். உயிர்களெல்லாம் அவளது சேய்கள்; சேய்கள் வாடி வருந்தி பிறவிப்பிணி அகற்ற, அவளை வேண்டின், தாய் ஒருபோதும் துன்பம் தவிர்க்க உதவாது இருப்பாளா? உயிர் உருகி வேண்டுதலின் அளவைப் பொறுத்தே, தாயின் கருணைப்பெருக்கின் வேகம் அமையும்.

எல்லா உயிர்களின் செயலின் சக்தியே பராசக்தி. ஆகையால் அவளது சக்தி ஒவ்வொரு உயிரிலும் இருப்பதால், அதையே பயன்படுத்தி அவளது அன்பைப் பெற முயல வேண்டும். எல்லா தெய்வங்களிடமும் செயல்படுவது அவளது சக்தியே. ஆகையால் இவளது அருளின்றி, எவ்வுயிரும் உய்ய அயலாது. பராசக்தியே, லட்சுமி, வாணி, சங்கரி என மூன்ருக வேறுபடுவது, செயலின் தன்மையினுலேயே. அவரவர் தம்மியல் பின்படி எப்படி நினைப்பினும், இறுதிப்பயன் அவளது அன்பு பெறுதலே ஆகும்.

மனிதன் விழிக்கும் காலத்தில் பயன்பெரு ஆசையே, கனவில் பெறுவதாக காண்கிருன். ஆசை நல்வழியில் செல்லவேண்டும்; கடவுள் பால் அன்பு கொண்டு, அவனையே நினைக்க வேண்டும்; அப்போது கனவிலும் கடவுள் நினைவே இருக்கும். எவ்வுயிரும், உயிர் நீங்குங் கால், என்ன நினைவுடன் பிரிகிறதோ, அதற்கேற்பவே, அடுத்த பிறவி அமைகிறது. கனவிலும், கடவுள் நினைவருத உயிர் பிரியும் போதும் கடவுள் நினைவு நிலைத்து, கடவுளை அடைகிறது. ஆதலால், அன்னையின் நினைவருது வாழ்வதே உயிர்களுக்குச் சால சிறந்தது; உயிர் முடியும் தருணத்திலும், அன்னையின் பதத்தையே போற்றி, அப்பதத்தையே அடைந்து, பிறவிப்பிணி நீங்கி, எல்லையில்லா இன்பம் பெறுவது திண்ணம்.

# இறை வழிபாடு

[திருமுருக. கிருபானந்தவாரியார்]

## இறைவன்

எங்கும் நிறைந்தவன் இறைவன். இறை என்ற சொல் ''இறு'' என்ற பகுதி அடியாகப் பிறந்தது. சரம் அசரம் என்ற எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவன் இறைவன்.

''பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற
பரிபூரணானந்தமே'' நிறைகின்ற

'அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்தது'

இறை.

உடம்பிலே உயிரும் உயிரிலே இறையும் தங்கியிருக்கின்றன. உதை பந்து-பந்துக்குள் ''பிளாடர்'' அதற்குள் காற்று என்பதுபோல் எல்லாப் பொருள்களையும் எல்லா உயிர்களையும் இயக்குகின்றதனுல் அப் பரம் பொருள் இயவுள் எனப் பேர் பெற்றது. 'பெரும் பெயர் இயவுள்'' என்பார் நக்கீரர். எல்லாவற்றையும் கடவுவதனுல் கடவுள் எனவும் பேர் பெற்றது.

ஒரு மருத்துவ மனையில் மருத்துவர் தங்கியிருப்பதன் நோக்கம் அம் மருத்துவ மனையில் உள்ள பிணியாளர்களின் பிணிகளைப் போக்குவதேயாகும். அதுபோல், இறைவன் எல்லா உயிர்களிலும் தங்கி அவ்வுயிர்களின் பிறவிப் பிணியைப் போக்குகின்ருன்.

'உள்ளொடு புறங்கீழ் மேலாய்
உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வன்'

என்பார் பரஞ்சோதி முனிவர்.

''அண்டமும் அளவிலாத உயிர்களும்
கொண்டவன்'' (ஆகமாகக்

என்பதும் அவருடைய திருவாக்கு.

இங்ஙனம் இறைவன் எங்கும் இருப்பினும் ஞானிகள் திருவுள்ளத்திலும் திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்ருன். ஏனைய இடங்களில் இறைவன் மறைந்திருக்கின்ருன்.

'ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும்
ஒளியானே'' - மாணிக்கவாசகர்.

பாலில் நெய் மறைந்திருப்பது போல் பிற இடங்களில் இறைவன் நிறைந்து மறைந்திருக்கிருன். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு உருண்டு வெளிப்பட்டிருப்பது போல் ஞானிகள் உள்ளத்திலும், திருக் கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சியளிக்கின்ருன்.

மற்ற இடங்களில் இறைவனை நினைந்து தியானிப்பதனுலும் துதிப்பதனுலும் வழிபடுவதனுலும் வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால் வினைகள் வெந்து எரிந்து கரிந்து நீருகி விடுகின்றன.

கொடிய வெய்யிலில் ஒரு துணியை வைத்தால், அத்துணி வெதும்புமேயன்றி வெந்து சாம்பராகாது. சூரியகாந்தக் கண்ணுடியை வெய்யிலில் வைத்து அதன்கீழ் வரும் மற்ருெரு வெய்யிலில் துணியை வைத்தவுடனே அத்துணி சாம்பராகி விடுகின்றது. நேர் வெய்யிலுக்கு இல்லாத ஆற்றல் சூரியகாந்தக் கண்ணுடியின் கீழ் வருகின்ற வெய்யிலுக்குண்டு.

பரந்து விரிந்து இருக்கின்ற கதிரவனுடைய வெப்பத்தை ஒன்று படுத்தித் தன் கீழே சூரியகாந்தக் கண்ணாடி பாய்ச்சுகின்றது. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது வெய்யிலில் வேட்டியை வைப்பது போலாகும். ஆதலால், திருக்கோயில் வழிபாடு இன்றியமையாததாகும்.

'மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன்எனத் தொழுமே'
என்பது சிவஞானபோதம்.

திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப்பெற்ற காரணத்தால் அவை மேன்மை பெற்று வழிபடுவோருடைய வல்வினைகளையகற்றி, வேண்டிய வரங்களை வழங்கி அருள் புரிகின்றன.

பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியின் மூலமாக அதனைப் பெறுவது போல் எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளைத் திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் மூலமாக நாம் பெறுதல் வேண்டும்.

ஒரு பறவை இரு சிறகுகளைக் கொண்டு பறப்பது போல், இறை வழிபாட்டிற்குப் பூவும் நீரும் வேண்டப்படுகின்றன.

''புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்''

என்பது திருமந்திரம். எங்கும் நிறைந்த இறைவனை, எங்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

''அன்புடன் ஆசார பூசை செய்து
உய்ந்திட வீணாள்படாது அருள்புரிவாயே''

என்று அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

திருக்கயிலாய மலையில் பார்வதி பரமேச்வரர் மீது விளையாட்டாக வில்வக் கிளையை உதிர்த்த குரங்கு அபுத்தி பூர்வமாகச் செய்த அச் சிவ புண்ணியத்தால் பூவுலகிற் பிறந்து, முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் மூவுலகும் ஆண்டது.

''வில்வக் கிளையுதிர்த்த வெய்யமுசுக்கலையைச்
செல்வத் துரை மகனாய்ச் செய்தனையே''

- திருவருட்பா.

இறைவழிபாடு செய்து மார்க்கண்டேயர் மறலியை வென்ற வரலாறு உலகம் அறிந்த ஒன்று.

ஆத்மஜோதியில் அருட்ஜோதி சூழ சிவஜோதி விளங்குகின்றது.

ஆத்மஜோதி - வட்டமாகிய கல்.
அருட்ஜோதி - சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார்.
சிவஜோதி - மேல் நோக்கிய இலிங்கம்
இதுதான் சிவலிங்கத்தின் உண்மை.

''ஜோதியுள் ஜோதியுள் ஜோதி''

கோயில் ஐந்து பிரகாரங்களோடு கூடியது. இந்த உடம்பே இறைவன் இருக்கின்ற திருக்கோயில். இந்த உடம்பும் அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்ற பஞ்சகோசங்களையுடையது.

உடம்பில் 32 கட்டுக்களோடு கூடிய முதுகுத் தண்டே திருக் கோயிலில் கொடிமரமாகக் காட்சியளிக்கிறது.

கொடிமரத்தில் கொடி ஏறியவுடன் இறைவன் வெளியே வந்து காட்சியளிக்கின்றான். அதுபோல் முதுகெலும்பாகிய வீணாதண்டத்தில் வளைந்து செல்லுகின்ற சுழுமுனை என்ற வெள்ளை நரம்பின் வழியாகப் பிராணவாயு ஆறு தாரங்களையும் கடந்து, பிரமரந்திரத்தைத் தாண்டி சகஸ்ரார வெளியிலே சென்றவுடன் சிவஜோதி காணப்படும்.

திருக்கோயிலில் விளங்கும் பத்திர இலிங்கமாகிய பலிபீடம் பாசத்தையும் நந்தி தேவர் பசுவையும், சிவலிங்கம் பதியையும் குறிப்பிடுகின்றன.

நமது சரீரத்தில் உள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையுங் கோயிலில் உள்ளயாக மண்டபம், அலங்கார மண்டபம், கல்யாண மண்டபம், நிருத்த மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் என்ற மண்டபங்கள் தெரிவிக்கின்றன. எனவே திருக்கோயிலில் சென்று இறைவனை வழிபட்டு அங்கே கண்ட பரம்பொருளை நம் உடம்புக்குள்ளேயும் கண்டு மனோலயம் பெறவேண்டும்.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன்சிவ லிங்கம்
கள்ளப்புலனைந்துங்காளாமணி விளக்கே'

- திருமந்திரம்.

கட்டையில் கனல் மறைந்திருக்கின்றது "விறகிற் றீயினன்" என்கிறார் அப்பர் பெருமான். கட்டையைக் கடைந்தவுடன். அதில் மறைந்த கனல் வெளிப்பட்டுக் கட்டை கனலாகக்காட்சியளிப்பது போல், உயிரில் ஒளிந்திருக்கின்ற இறைவனை ஞானத்தால் கடைவோமாயின் சிவம் வெளிப்பட்டுச் சீவனைச் சிவமாக்கிக் கொள்ளுகிறது.

எண்ணில் காலமாக எண்ணில்லாத உடம்பு எடுத்து வருகின்ற நாம் இறைவனை மெய்யன்புடன் உள்ளம் குழைந்து உருகி மலரிட்டு அருச்சனை செய்து வழிபட்டால் பிறவி நோய்தீரும்.

"கன்றெடுத்த விளவெறிந்து காலெடுத்த
மழைக்குடைந்த காலிகாக்க
மன்றெடுத்த மால்விடையின் கொடியெ
டுத்து வடிவெடுத்துக் கூறொணாத
மன்றெடுத்த சேவடியின் மலரெடுத்துச்
சாத்தியபின் வழிபட்டோர்கள்
இன்றெடுத்த வுடற்பிறவி யினியெடா
வண்ணமெண்ணம் எய்துவாரே"

- சிவரகசியம்.

தெய்வம் ஒன்று

திருக் கோயில்களில் சிவலிங்கம், தக்ஷிணாமூர்த்தி. நடராஜர், சந்திரசேகரர், அம்பிகை, விநாயகர், முருகர், திருமால் என்ற பல மூர்த்திகள் இருப்பினும், அவைகள் அனைத்தும் ஒரே மூர்த்திதான்.

நெருப்பு - சிவபெருமான்
நெருப்பில் உள்ள சூடு - அம்பிகை
நெருப்பில் உள்ள செம்மைநிறம்-விநாய
நெருப்பில் உள்ள ஒளி-முருகவேள் (கர்

"சுடரோ சிவபெருமான் சூடுபரா சக்தி
திடமார் கணநாதன் செம்மை-படரொளியோ
கந்தவேளாகும் கருதுங்கால் சற்றேனும்
வந்ததோ பேத வழக்கு"

மலர் — சிவபெருமான்
மலரின் வடிவம் - அம்பிகை
மலரின் நிறம் - கணபதி
மலரின் மணம் - மயிலவன்

நூல் - சிவபெருமான்
நூலின் அகலம் - பார்வதி
நூலின் நீளம் - கணேசர்
நூலின் கனம் - குமாரக்கடவுள்

சிவபெருமானுடைய சக்திகள் நான்கு. அருள் சக்தி, போர் சக்தி, கோப சக்தி, புருஷசக்தி.

அருள் சக்தி - பார்வதி
போர் சக்தி - காளி
கோப சக்தி - துர்க்கை
புருஷ சக்தி - விஷ்ணு

''அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே''

என்பது அப்பர் திருவாக்கு.

முக்கண்ணன் — முக்கண்ணி
சங்கரன் - சங்கரி
திரிபுர சுந்தரன் - திரிபுர சுந்தரி

என்பது போல், அரன் - அரி என வந்தது. ஆகவே, திருமாலின் வழிபாடும் அம்பிகையின் வழிபாடும் ஒன்றென உணர்க.

திருக்கோயில்களில் காட்சியளிக்கும் துவார பாலகர்களில் ஒருவர் ஆள் காட்டு விரலைக் காட்டி நிற்பது உள்ளே வழிபடச் செல்வோருக்குக் கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்துகிறது. மற்றொரு துவாரபாலகர் ஒரு கையை விரித்துக் காட்டுவது, கடவுள் ஒன்றைத் தவிர வேறொன்றில்லை என்பதை உணர்த்துகின்றது. இதையே ''ஏகம் ஏவ அத்விதீயம் ப்ரம்ம'' என்று வேதம் கூறுகின்றது. கடவுள் ஒன்றேதான்; இரண்டாவது இல்லை என்பது இதன் பொருள்.

எனவே, தெய்வ வழிபாடு செய்வோர் தெய்வபேதம், மூர்த்திபேதம் குறித்து மாறுபட்டு மலையாது, நிலையாய அன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபட வேண்டும்.

''யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்''

'ஆரொருவர் உள்குவார்உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்''

— அப்பர்.

ஒரு காகிதத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல், தெய்வத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று தட்பம்; மற்றொன்று வெப்பம். வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால் தான் மலர் மலராகக் காட்சியளிக்கும். வெப்பம் மிகுந்தால் மலர் வாடும். தட்பம் மிகுந்தால் மலர் அழுகும்.

இந்த உடம்பும் சீதோஷ்ணத்தால் தான் வாழ்கின்றது. ஒரு சமயம் இந்த உடம்பில் சூடு குறையுமானால் சுற்றத்தார் சூழ்ந்து கொள்வார்கள். மருத்துவர் வந்து பார்த்து "TOO LATE" என்று கூறி, அவர் விரும்பியதெல்லாம் கொடுங்கள் என்று சொல்லுவார். ஆகவே, உலகிற்கு வெப்பமும் தட்பமும் இன்றியமையாதவை. வெப்பத்தின் நுண்மை சிவம். தட்பத்தின் நுண்மை திருமால். வெப்பத்தின் நிறம் சிவப்பு. தட்பத்தின் நிறம் பச்சை. எனவே, சிவ மூர்த்திபவளமேனியன். திருமால்பச்சை மாமலைபோல் மேனியன். சிவம் அனல் ஏந்தி விளையாடுகின்றது. திருமால் ஆழியிடைத் துயிலுகின்றார். சிவாலயத்தில் வெந்த நீற்றையும், விஷ்ணு கோயிலில் தீர்த்தப் பிரசாதத்தையும் வழங்குகின்றார்கள்.

பாதி சிவம். பாதி விஷ்ணு. இந்தத் தத்துவத்தைச் சிவமூர்த்தங்கள், இருபத்தைந்து ஐந்தனுள் கேசவார்த்த மூர்த்தம் என்பது தெரிவிக்கின்றது. சங்கர நாராயணர் கோவிலும் இதற்குச் சான்று.

''தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும்
சக்கரமும்
சூழரவும் பொன்நாணும் தோன்றுமால் - வீழும்

திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்
தைக்
கிரண்டுருவும் ஒன்ருய் இசைந்து''
என்று ஆழ்வார் கூறுகிருர்.

சிதம்பரம், திருநெல்வேலி, காஞ்சீ புரம், திருக்குற்ருலம், திருவருணை முதலிய திருத்தலங்களில் உள்ள சிவாலயங்களில் திருமாலும் காட்சி தருகின்ருர்.

**ஏன் வணங்க வேண்டும்?**

நம்மிடைப் பலருக்கும் இறைவனை ஏன் வணங்க வேண்டும்? வணங்காவிடில் என்ன? மனித வாழ்வில் இறையுணர்ச்சி இல்லாமல் வாழ முடியாதா? நாம் வணங்காவிடில் கடவுளுக்கு என்ன நஷ்டம் ஏற்படும்? என்ற விளுக்கள் உள்ளுணர்வில் எழுவது இயல்பு. இவைகளுக்கு விடைகாண முயல்வது முறை.

விலங்குகளும் உண்ணுகின்றன; உலாவுகின்றன; தூங்குகின் வம்சத்தை வளர்க்கின்றன; மனிதர்களாகிய நாமும் உண்ணுகின்ருேம்; உறங்குகின்ருேம்; உலாவுகின்ருேம்; மக்களைப் பெறுகின்ருேம். இவை விலங்குகட்கும் மனிதர்கட்கும் ஒன்ருகவே அமைந்திருக்கின்றன. விலங்குகளினின்றும் மனிதன் உயர்ந்து காட்சியளிப்பது தெய்வ உணர்ச்சி ஒன்ருலேயேதான்.

ஒரு கானகத்தில் விலங்கு மாநாடு கூடிற்று. அதில் தலைமை தாங்கிய சிங்கம் ''விலங்குத் தோழர்களே! உயிர் வாழ்க்கைக்கு ஆடை அவசியமா? மனிதர்கள் ஆடைக்கு அவசியமின்றி அதிகம் செலவளிப்பது வருந்தத் தக்கது; கண்டிக்கத் தக்கது'' என்று கூறிற்று. இதுபோல் மனித வாழ்க்கைக்குக் கடவுள் வணக்கம் தேவையா? நாங்கள் கடவுளை வணங்காமல் வாழவில்லையா? என்று விளுவுவார்கள். மானம் உள்ளவன் ஆடை உடுப்பான். மனம் உள்ளவன் இறைவனை வணங்குவான்.

மனிதன் செய்கின்ற பாவங்களுக்கெல்லாம் கழுவாய் உண்டு. நன்றி கொன்ற பாவத்துக்கு மட்டும் கழுவாய் இல்லை.

''எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்
டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

- திருக்குறள்.

''ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத்தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும் உளஎன
நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்ருேர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே''

(புறநானூறு 34)

எனவே, கழுவாய் இல்லாத பாவம் நன்றி கோறல் ஆகும். இதற்கு நேர் மறுதலையாக சிறந்த புண்ணியம் நன்றி மறவாமையாகும். இந்த உடம்பையும், உடம்பின் உறுப்புக்களையும் உள்ளுறை கருவி கரணங்களையும் தந்தவன் இறைவன். கண்ணைக் கொடுத்த இறைவன் கண் தூசுபட்டு மங்காமல் இருக்கும் பொருட்டு கண்ணிற்குக் கதவு போல் இமையும் கொடுத்தான். அந்த இமையின் நுனியில் உரோமங்களையும் அமைத்தான். உணவு உண்கின்ற வாயில் உணவைத் துகள் படுத்த (Flour Teeth) பற்களையும் கொடுத்தான். வாய்க்குள் நுழைகின்றவை நல்லனவா? அல்லனவா? என்று சோதித்து உள்ளே அனுப்ப வாய்க்கு நேராக இரண்டு காவற்காரர்களைப் போல் இரு நாசிகளை அமைத்தார். உண்ணுகின்ற உணவைப் பல் மெல்லவும், நாவில் நீர் ஊறவும் அமைத்தார். நம்முடைய உடம்பில் எல்லா அவயவங்களிலும் நரம்புகள். நாவில் மட்டும் நரம்புகள் இல. ஏனோ?

நரம்புள்ள பகுதிகள் சுளுக்கிக் கொள்ளும். நாவில் நரம்பு வைத்திருந்தால் ஒரு நாளுக்கு நூறு முறையாவது சுளுக்கிக் கொள்ளும். விளக்கெண்ணெய் தடவி உருவ வேண்டி வரும். இறைவன் கருணையினால் இடையறாது பேசுகின்ற நாவை நரம்பின்றிப் படைத்துக் கொடுத்தான். அவன் கொடுத்த நாவினால் அவனுடைய நாமங்களைச் சொல்லுதல் நன்றி பாராட்டுதலாகும். அவன் கொடுத்த தலையினால் அப்பரம பிதாவை வணங்குதல் நன்றிக் கடனாகும். வடமொழியில் காலையும் மாலையும் கடவுளைவணங்குவதை சந்தியாவந்தனம்என்பார்கள். சம் — செவ்வையாக தியா-தியானித்து, வந்தனம் - வணங்குவது சந்தியா வந்தனமாகும். இந்தச் சொல்லைப் பார்க்கினும் ஒருகோடி மடங்கு பொருளாழம் உள்ளதாகக் கடவுளை வணங்குவதற்குக் காலைக்கடன், மாலைக்கடன் என்று தமிழில் ஆன்றோர் கூறினர். கொடுத்த கடனை திருப்பிக் கொடாதது எத்துணைப் பெரிய பாபமாகுமோ, அத் துணைப் பெரிய பாபமாகும் இறைவனை வணங்காதிருத்தல். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என அப்பர் பெருமான் குறிப்பிடுகின்றார்.

கருணையே வடிவாகிய இறைவன் உயிர்களின் மீதுள்ள இரக்கத்தினால் இந்த உடம்பை வழங்கினான் என்பதை முன்னர் அறிந்தோம். அவன் தந்த உடம்பினால் அவனை வழிபடுவது கடமையாகும். இன்றேல் கடமையை மறந்த மடமையாகும். காவிரியில் ஒருவன் நீராடுவது காவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று. தன் உடம்பிலுள்ள வெப்பம் தணியும் பொருட்டுக் காவிரியில் நீராடுகின்றான். அது போல் அருட் கடலாயிருக்கிற ஆண்டவனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகின்றது.

''ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்
தாடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே
தீயாடும் கூத்தன்''

என்று மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவையில் அருளிச் செய்கின்றார்.

ஆதலின் அப்பர் பெருமான் இறைவன் நமக்கு தலை முதலிய கருவிகளைத் தந்தான் என்று தெரிவித்து விட்டு அக் அக் கருவிகளை நோக்கி இறை வழிபாடு செய்யுங்கள் என்றும் அருளிச் செய்கின்றார்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே.

தலையே நீ வணங்காய்-தலைமாலை தலைக்
கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனை
தலையே நீ வணங்காய்

உடம்பின்பயன் இறைவனை வணங்குவதாகும். அறிவின் பயன் இறைவனை அறிவதாகும். கல்வியின் பயன் கடவுளைத் தொழுவதாகும்.

''கற்றதனாலாய பயன் என்கொல் வால
றிவன்
நற்றாள் தொழாஅர் எனின்''

- திருவள்ளுவர்.

சென்றது காலம் சிதைந்த(து) இளமை
நலம்
நின்றதுசா வென்று நினைந்துருகி - மன்
றில்
நடிக்கின்ற பால்வண்ணர் நாமமெண்ணா
மாந்தர்
படிக்கின்ற நூல்எல்லாம் பாழ்.

- அதிவீரராம பாண்டியர்.

இறைவனுடைய திருவடியில் அன்பில்லாதவர் கல்வியின் பெருக்காலும், குலத்தின் முறுக்காலும் நன்மையடைய மாட்டார்.

கற்றதனுற் ரெல்வினைக் கட்டறுமோ நல்ல குலம்
பெற்றதனுற் போமோ பிறவிநோய்-உற்ற கடல்
நஞ்சுகலந்து கொண்டருணை நாதனடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி.

- அருணகிரியந்தாதி

ஆதலால், மனிதப் பிறப்புக்கு இறை வழிபாடு இன்றியமையாதது என உணர்க. ஒரு மாவட்டத்திற்கும் மற்ருெரு மாவட்டத்திற்கும் அரசாங்கத்தார் ஓர் எல்லைக்கல் அமைத்திருப்பது போல் விலங்குகட்கும் மனிதனுக்கும் இடையில் இட்ட எல்லைக்கல் இறை வழிபாடாகும். இறைவழிபாடு இல்லாத மனிதன் விலங்கெனவும், இறை வழிபாடு செய்கின்ற விலங்கு தேவன் எனவும் உணர்க.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் எறும்பு வழிபட்ட திருவெறும்பூரும், யானை வழிபட்ட திருவானைக்காவும் காட்சி தருகின்றன. எறும்பு முதல் யானை ஈறுக எல்லாவுயிர்களும் இறைவனை வழிபடவேண்டும் என்பது போதருகின்றது.

எறும்புகடை யானைதலை ஈசனைப்பூசித்துப்
பெறுங்கதிகண் டுந்தேறுர் பேய்கள் - அறிந்த
உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் தலைகையாய் வைக்கப்படும். (வையத்

- முதுமொழி வைப்பு.

## வழிபடும் முறை

கோயிலில் வழிபடுவோர் நீராடி, தூய ஆடை அணிந்து, சமயச் சின்னங்கள் தரித்து, அன்புடனும், ஆசாரமுடனும் கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும்.

கொடி மரத்திற்கு வெளியே விழுந்து வணங்குதல் வேண்டும். உள் பிராகாரங்களில் விழுந்து வணங்குதல் குற்றம்.

விநாயகரை ஒரு முறையும், சிவமூர்த்தியை மூன்று முறையும், அம்பிகையை நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும்.

கோயிலில் ஒருமைப்பட்ட மனதுடன் வழிபாடு செய்ய வேண்டும். கோயிலில் வழிபடுவோர் வீண் வார்த்தைகள் பேசுவதும், எச்சில் துப்புதலும், பிற தீமைகள் செய்தலுங் கூடா. அர்ச்சகர் தரும் விபூதி பிரசாதத்தைக்கீழே சிந்துதலும் ஒரு புறத்தில் எறிவதும் பெரும் பாவமாகும். சண்டேசுவரர் மீது நூல் இடுவதும், சிவலிங்கத்திற்கும் நந்தி தேவருக்கும் இடையே போவதும் குற்றமாகும்.

கோயிலில் பிரசாதங்களை உண்டு கோயில் தூண்களில் துடைப்பது அனுசிதமாகும். கோயிலில் படுத்து உறங்குவோர் மறுபிறப்பில் மலைப்பாம்பாகப் பிறப்பார்கள். வழிபாடு முடிந்தபின் கொடிமரத்தின் அருகிலிருந்து வட திசை நோக்கியமர்ந்து மூலமந்திரம் ஜெபிக்க வேண்டும். நன்கு இனிமையாக தோத்திரப் பாடல்களை அதிகம் சப்தம் போடாமல் இனிய குரலில் துதிக்க வேண்டும். கோயில் விளக்குகளில் எண்ணெய் இடுதல் வேண்டும்.

''விளக்கிட்டார் பேறுசொல்லில் மெய்ந்நெறி ஞானமாகும்''
- அப்பர்.

கோயிலில் அணைகின்ற விளக்கை அபுத்தி பூர்வமாகத் தூண்டிய எலி பலிச் சக்ரவர்த்தியாகப் பிறந்து புகழ் பெற்றது.

''நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே''

-திருவருட்பா.

## வீட்டு வழிபாடு

இனி, நாள் தோறும் குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் ஒன்றுகூடி காலை அல்லது மாலையில் வழிபட வேண்டும். வீட்டுத் தலைவன் ஒரு பாடலைச்சொல்ல ஏனையோர் அதனை வழி மொழிந்து சொல்ல இறைவனைக் காதலுடன் வழி பாடு செய்ய வேண்டும். இதனால் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாவதுடன் அந்த வீட்டில் தெய்வ கடாக்ஷமும் திருமகள் விலாசமும் உண்டாகும்.

## கூட்டு வழிபாடு

ஒரு தனி இழையை எளிதில் அறுத்து விடலாம். பல இழைகள் ஒன்று பட்டுத் திரித்த கயிறு (வடம்) தேரை இழுத்து விடும். அதுபோல், பல அன்பர்கள் வாரத்திற்கொரு நாள் கோயிலில் ஒன்றுபட்டு கூட்டு வழிபாடு செய்தால் திருவருளை ஈர்த்து விடலாம். முஸ்லிம் அன்பர்கள் தினம் ஒன்றுக்கு ஐந்து வேளை தவறாமல் தொழுவதும், கிறிஸ்தவ அன்பர்கள் ஞாயிறுதோறும் ஆண் பெண் அடங்கலும் தங்கள் தேவாலயத்திற்குச் சென்று நியதியாகத் தொழுவதும் போல், இந்துக்களாகிய நாம் குறிப்பிட்ட நாட்களில் ஆங்காங்குள்ள ஆலயங்களில் நியதியாக வழிபடுவது மிகமிக அவசியமாகும். அண்ணல் காந்தியடிகள் இறுதியாகப் பிரார்த்தனைக் கூட்டம் நாள்தோறும் நடாத்தி முடிவில் பிரார்த்தனைக் கூட்டத்திலேயே ஆத்மசாந்தியடைந்தார். ஆதலால் அன்பர்கள் காதலாகிக் கசிந்து கடவுளை வழிபட்டு இகபர நலன்களை எளிதில் பெறவேண்டும்.

# மாரி அம்மனும் மகா அபிஷேகமும்

(ஸ்வாமி அத்வயானந்த ஸரஸ்வதி - திருகோணமலை)

கருணைமழை பொழிந்துயிர்கள் கலக்கமுறு
வகைகாக்கும் காரணத்தால்
சுருதிமகா மாரியெனத் தொழுதேத்தும்
சுந்தரியைத் தொண்டரெல்லாம்
தரளமுதல் இரத்தினமும் சொரிந்தளிக்கும்
மிகப்பெரிய தண்ணளியால்
அருள்முத்து மாரியென அழைத்திடுவார்
அவள்பாதம் அண்டிவாழ்வாம்.

தனைமறந்த மக்களின்மேல் வைசூரி
முத்துகளைத் தண்ணளியால்
கனமழையே பொழிவதுபோல் சொரிந்தவரின்
கவனத்தைக் கவர்ந்துபின்னர்
முனமுகந்தோள் மார்புதரம் தொடைகாலின்
இறங்கிவிடும் முறைபுரிந்து
மனமுடலும் குளிரச்செய் தருள்முத்து
மாரிபதம் வணங்குவோமே. 2

மேலேயுள்ள இரண்டு பாக்களும் அம்பிகைக்கு மகாமாரி என்றும் முத்து மாரியம்மன் என்றும் பெயர் வந்த காரணத்தைக் கூறுகின்றன.

மழைக்கு ''மாரி'' என்று ஒரு பெயருண்டு. உலகிலுள்ள உயிர்களெல்லாம் அம்பிகையின் மக்களேயாதலால் அம்பிகை தனது மக்களாகிய உயிர்கள் மீது கருணையை மகாமாரி போலப் பொழிந்து அவர்களெல்லாம் கலக்கமடையா வண்ணம் காப்பாற்றுகின்ற காரணத்தினால்,வேதமானது அந்த அம்பிகையை ''மகா மாரியம்மன்'' என்று துதி செய்து தொழுகின்றது. அந்த அம்பிகை பக்தர்களுக்கு திரிபுரசுந்தரியாகக் காட்சியளிக்கின்றாள். இத்தகைய சுந்தரியாகிய மகாமாரியம்மனையே அவளுடைய தொண்டர்களாகிய பக்தர்கள் தங்களுக்கு முத்து, பவளம், வைரம், பொன் முதலிய இரத்தினங்களை மாரிபோல் பொழிந்து, தங்களைச் சிறந்த செல்வந்தர்களாக்கிக் காத்தருளிய மிகப் பெரிய குளிர்ந்த அருளை உடையவளாய் இருத்தலினால் அருள் நிறைந்த 'முத்துமாரியம்மன்' என்று சொல்லி அழைக்கின்றார்கள். அத்தகைய முத்துமாரியம்மனின் பாத தாமரைகளை நாம் அடைந்து உயர்வாக வாழ்வோம் என்று முதற் பா கூறுகின்றது. இதனால், பக்தர்களுக்கு அம்பிகை - இரத்தினங்களாகிய முத்துக்களை மாரிபோல் பொழிவதனால் ''முத்துமாரி'' என்னும் பெயர் வந்தது என்று தெரிகின்றது.

2. ஜகதம்பிகையை மறவாமல் பக்தி செய்பவர்கள் உய்வையடைந்து இம்மையிலும், மறுமையிலும் இன்பத்தையே அடைவார்கள். பக்தியில்லாதவர்கள் இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தையே அடைவார்கள். அம்பிகையானவள் தனது மக்கள் தன்னை மறந்து பக்தி செய்யாமல் இருந்து இருமையிலும் துன்பத்தையே அடையாதபடி செய்ய வேண்டுமென்னும்

குளிர்ந்த கருணையினால், தன்னை மறந்து பக்தி செய்யாமல் இருக்கும் மக்களின் மீது வைசூரி அம்மை முத்துக்களை மேகம் மழை பொழிவது போல் சொரி கின்றாள். அதனால் மிகவும் வருத்தமுறுகின்ற அறிவு நிறைந்த மக்கள் அம்பிகை மீது பக்தி செலுத்தி, மாரியம்மன் தாலாட்டு முதலிய பாக்களைப் பாடித் துதித்து வணங்குகின்றார்கள். அதனால் மகிழ்வடைந்த அம்பிகை வைசூரி அம்மை முத்துக்களை முதலில் முகத்தினின்றும், பின்னர் தோளினின்றும், பிறகு மார்பு, வயிறு, துடை, கால்கள் இவைகளினின்றும் முறையே கீழேஇறங்கிப் போகச் செய்து, பக்தர்களின் உடம்பும் மனமும்குளிரச்செய்துஅவர்களுக்கு இம்மை மறுமை இன்பங்களைக் கொடுத் தருளுகின்றாள். வைசூரி அம்மை வார்த்து இறங்கிய பிறகு, அவர்களுடைய உடம்புச் சூடெல்லாம் தணிந்து குளிர்ந்திருப்பதை நாம் காண்கின்றோம். இப்படி மக்களின் மீதுள்ள மிகக் குளிர்ந்த அருளினால் அவர்கள் கடவுளை மறந்து பக்தியற்றுப் பாழ்போகாதபடி வைசூரி முத்துக்களை மாரிபோல் பொழிந்து பக்தி வரச் செய்து காத்தலினால் ''அருள் முத்துமாரி'' யென்னும் பெயரேற்பட்டது என்றும், அந்தத் தேவியின் அடியிணைகளை நாம் அடைந்து வணங்கி உய்வோம் என்றும் இரண்டாவது பா இசைத்துள்ளது.

மாரியம்மனைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுந்த சிலர், மாரியம்மன் என்பது ஜமதக்னிமுனிபத்தினியும் பரசுராமரின் தாயாருமாகிய இரேணுகா தேவியே என்று கூறுகின்றனர். கோவலனின் மனைவியாகிய கண்ணகித்தெய்வமே பின்னர் மாரியம்மன் என்னும் பெயரால் வழங்கப்படுகின்றது என்று சிலர் கூறுகின்றனர். அம்மை வார்த்து இறந்துபோன சில கன்னிப் பெண்களையே ஆங்காங்குத் தம் குடும்பக் குல தெய்வமாக வைத்து மாரியம்மன் என்னும் பெயரிட்டு வழிபட்டு வந்தார்கள். அதுவே மாரியம்மன் என்னும் தெய்வமாகும் என்று சிலர் கூறுகின்றனர். இயேசு கிறிஸ்து நாதரின் தாயாகிய கன்னிமரி அம்மனையே இந்துக்கள் மாரியம்மன் என்று சொல்லிக் கும்பிடுகின்றார்கள் என்று சிலர் கூறுகின்றார்கள்.

சிலர் - சீதளா தேவி என்னும் அம்மனே தமிழ்நாட்டில் மாரியம்மன் என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றாள். வைசூரி அம்மை வார்த்துள்ளவர்களுக்காக வேண்டிக் கொண்டு, சீதளாதேவிக்கு 108 குடம் குளிர்ந்த ஜலத்தினால் அபிஷேகம் செய்து பூஜித்தால் வைசூரி வெகு சீக்கிரத்தில் இறங்கிக் குணமடைவதைக் காண்கின்றோம். காசி க்ஷேத்திரத்தில் ''தசாஸ்வமேத காட்'' என்னுமிடத்தில் சீதளா அம்மன் காசி கங்கா ஜல அபிஷேகம் பெற்று இங்ஙனம் மிகவும் பிரசித்தமாக இருக்கின்றது. அதுவே மாரியம்மன் என்னும் தெய்வமாகும் என்று கூறுகின்றார்கள். இப்படி மாரியம்மன் என்பதை ஒவ்வொரு பக்கத்தில் ஒவ்வொரு விதமாகக் கூறும்போது நீங்கள் இப்படி மஹா திரிபுர சுந்தரியாகிய சித் பராசக்தியே கருணை மாரி பொழிவதனால் மாரியம்மன் என்று சொல்லப்படுகின்றார் என்று கூறுகின்றீர்களே! அது எவ்வாறு பொருந்தும்? என்று கேட்டால்,

உண்மை. ஆராய்ச்சியில் அடங்குவது கடவுளல்ல. கடவுள் ஆராய்ச்சிக்கு அப்பாற் கடந்து நிற்பவர், ஆராய்ச்சிகள் உண்மையாக இருக்கலாம். கொண்டாடப்படும் தெய்வங்கள் அதுவாகவே இருக்கும் என்பது நியமமல்ல. முன்பு முருகராக இருந்த பல மூர்த்திகள் இன்று விஷ்ணுவாகப் பூஜிக்கப்படுகின்றன. திருக்குற்றாலத்தில் விஷ்ணுவே இன்று சிவனாகப் பூஜிக்கப்படுகின்றார் என்று கந்தபுராணம் கழறுகின்றது. முன்பு ஆடு கோழிகளைப் பலிவாங்கும் தெய்வமாக இருந்த பல தெய்வங்கள் இன்று சுத்த பூஜையே கொள்ளும் சுவாமிகளாகஆகிவிட்டனர். இவற்றைப் போல-

முன்பு, ரேணுகா தேவியாகவும், கண்ணகியாகவும், மாரி வார்த்து மாண்ட மங்கையர்களாகவும், மரியம் மனுகவும், சீதளாமாயியாகவும், இன்னும் பல்வேறு அம்பாள்களாகவும் இருந்திருக்கலாம். ஆனுல், அறிவு நிரம்பி யாவற்றினும் உயர்ந்த சக்தியையே வழிபட்டு உயர்வை அடைய வேண்டுமென்று கருதுகின்ற இக்காலத்தில், எல்லா அம்மனேயும் செத்துப் பிறப்பனவும், உயிர்ப்பலி கொள்வனவும் ஆகிய சிறுதெய்வங்களாகக் கொள்ளாமல் அருளே உருவாகவும், அருள் மாரி பொழிபவராகவும் இருக்கும் ஆனந்த லலிதா திரிபுர சுந்தரியாகவே கொண்டு வழிபடுபவர்கள் என்பதில் ஐயமில்லே. எல்லாரும் ஸ்ரீ மாதாவாகிய மகா முத்துமாரியம்மன் பொற்றுணைத் தாள்களேப் போற்றி உய்வோமாக!

## மகா அபிஷேகம்

எங்கும் பரந்து விரிந்திருக்கும் சூரிய உஷ்ணத்தை ஒரு பூதக் கண்ணுடியைக் கொண்டு ஓரிடத்தில் குவியச் செய்து நமக்கு வேண்டுமென்ற பொருளேத் தீப்பிடித்தெரியச் செய்வதுபோல பிரபஞ்சமெங்கும் பரந்து விரிந்து அருள் மயமாய் இருக்கும் கடவுட் சக்தியை நாம் வழிபடும் ஓர் விக்கிரகத்தில் வந்து குவிந்திருந்து வேண்டுபவர்கட்கெல்லாம் வேண்டியாங்கு அருள் செய்யும்படி செய்யச் செய்வதற்காக வேண்டிச் செய்யப்படும் கிரியையே மகா கும்பாபிஷேகம் ஆகும்.

அது எவ்வாறு செய்யப் பெறுகின்றது? எனில் - அண்டத்திலும் பிண்டத்திலும் அகமும் புறமும் வியாபித்திருக்கும் கடவுட் சக்தியைத் தனது மூலாதாரத்தில் கொண்டு வந்து சேர்த்து வைக்கும் மந்திர யோக வித்தையை அறிந்து, அதை அனுஷ்டானத்தில் கொண்டு வந்துள்ள ஆசாரியர்கள் இதனேச் செய்வார்கள்.

ஆசாரியர்கள் ஜ்வாலே விட்டுச் ஜ்வலித்து எரிகின்ற யாகாக்கினிக்கு எதிரில் அமர்ந்து, அண்டமெங்கும் நிறைந்த சித் பராசக்தியைப் பிண்டமாகிய தமது உடலுக்குள்ளே மூலாதாரத்தின் கீழேயுள்ள சகஸ்ரார கமலத்தில் குண்டலினீ சக்தியாகப் பாவித்து, அதை எழுப்பிப் பூஜிப்பார்கள். பின்னர்அந்த சித் சக்தியை மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரத்திலும் சுழுமுனே நாடி மார்க்கமாகக் கொண்டு வந்து அங்கங்கேயும் வைத்து மானசிகமாகப் பூஜை செய்வார்கள்.

பின்னர் இதுவரை தேஜோ ரூபமாக இருந்த சக்தியைத் தலே உச்சியில் பிரம்மரந்திரத்திற்குக் கொண்டு வந்து அங்கு ஆகாச ரூபமாகப் பாவித்துப் பூஜிப்பார்கள். அதன் பிறகு அந்த சித் சக்தியை வாயு ரூபமாக இருப்பவராகப் பாவித்து தமது மூச்சுக் காற்ருேடு வெளியே கொண்டு வந்து எதிரில் இருக்கும் யாகாக்கினியில் ஆவாஹனம் செய்து, அக்கினி சொரூபமாக இருப்பதாகப் பாவித்துப் பூஜித்து யாகம் செய்வார்கள்.

அதன் பிறகு, அக்கினி வடிவாக இருந்த சித் சக்தியை நீர் நிறைந்த பூர்ண கும்பங்களில் ஆவாஹனம் செய்து, ஜல வடிவாக இருப்பதாகப் பாவித்துப் பூர்ணகும்பங்களில் ஜல வடிவாக இருக்கும் சித் சக்தியைப் பிருதிவி வடிவாக இருக்கும் விக்கிரகங்களில் அபிஷேகம் செய்து, அந்த விக்கிரக வடிவாக அமர்ந்து விட்டதாகப்பாவித்துப் பூஜிப்பார்கள்.

அம்பிகையின் ஸ்தூல வடிவாக இருப்பது கோவிலாகும். ஆதலால், முதலில் கோவிலின் உச்சியிலுள்ள கும்ப கலசத்தில் அபிஷேகம் செய்வார்கள். அதன் பிறகு மூல ஸ்தானத்திலுள்ள அம்பிகை விக்கிரகத்திற்கு மகா அபிஷேகம் செய்து, பூஜை செய்வார்கள். இப்படிச் செய்வதனுல் அந்த மூர்த்தி அன்பர்களுக்கு அருள் வழங்கும் அம்பிகையாக ஆகின்றது.

இத்தகைய கும்பாபிஷேகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களும் சென்று பக்தியோடு தியானம் செய்து போற்றுவதால், அந்த மூர்த்தியினிடத்தில் அருள் சக்தி அதிகமாகப்பிரகாசிக்கிறது. ''சத கும்பாபிஷேகம் கண்டவர் சத் கதிபெறுவர்'' என்பது பழமொழி.

இத்தகைய மகா முத்துமாரியம்மனின் கும்பாபிஷேகம் பூஜையை எல்லோரும் தரிசித்து எல்லா நலனும் பெற்று வாழ்வோமாக! சுபம்.

ஸ்வாமி அத்வயானந்த ஸரஸ்வதி

திரு ஈங்கோய்மலை.

6–12–1966

உலகத்து நாயகியே — எங்கள் முத்து மாரியம்மா
உன்பாதம் சரண்புகுந்தோம் — எங்கள் முத்து மாரியம்மா
கலகத்தரக்கர் பலர் — எங்கள் முத்துமாரியம்மா
கருத்தினுள்ளே புகுந்து விட்டார் — எங்கள் முத்து மாரியம்மா

பலகற்றும் பலகேட்டும் — எங்கள் முத்துமாரியம்மா
பயனொன்றும் இல்லையடி — எங்கள் முத்துமாரியம்மா
நிலையெங்கும் காணவில்லை — எங்கள் முத்துமாரியம்மா
நின் பாதம் சரண் புகுந்தோம் — எங்கள் முத்துமாரியம்மா

துணி வெளுக்க மண்ணுண்டு — எங்கள் முத்துமாரியம்மா
தோல் வெளுக்க சாம்பலுண்டு — எங்கள் முத்துமாரியம்மா
மணி வெளுக்க சாணையுண்டு — எங்கள் முத்துமாரியம்மா
மனம் வெளுக்க வழியில்லை — எங்கள் முத்துமாரியம்மா

பிணிகளுக்கு மாற்றுண்டு — எங்கள் முத்துமாரியம்மா
பேதமைக்கு மாற்றில்லை — எங்கள் முத்துமாரியம்மா
அணிகளுக்கோ ரெல்லையில்லாய் — எங்கள் முத்துமாரியம்மா
அடைக்கல மிங்குனைப் புகுந்தோம் — எங்கள் முத்துமாரியம்மா

# திருத்தலப் பயணம்

நா. அருமைநாயகம்

தேவாரம், பிரபந்தம், திருப்புகழ் இன்னும் ஏனைய தீந்தமிழ்ப்பாடல்களை இசைவல்லுனர்கள் படிக்கும் போதும், வானொலியில் . கேட்கும் போதும் அவற்றை அனுபவிப்பதில் அடியேனுக்கு அளவு கடந்த ஆசை. அருளாளர்களின் பாடல்களைக்கேட்கும் தோறும் பாடும் தோறும் ''நானும் ஏன் தல யாத்திரை செய்யக்கூடாது'' என்ற எண்ணம் என் அகத்தே எழும்பியது. திருத்தல யாத்திரை எண்ணம் நாளுக்கு நாள் வளர்ந்து வலுப்பெற்று வந்தது. எதை நினைத்தாலும் அதனை விரைவில் பூர்த்தி செய்து முடிக்கவேண்டும் என்பது எனது இயல்பான குணம். எனவே திருத்தலப்பயணத்தை ஒரு மாத விடு முறைத்திட்டத்தில் தொடங்கி முடிக்க முடிவு செய்தேன். எனது மனைவியும் மகனும் இந்த யாத்திரையில் கலந்து கொள்ள இசைந்தது என் திட்டம் ஆக்கம் பெற வழி பிறந்தது.

தரிசிக்க வேண்டிய தேவார பிரபந்த தலங்களின் எண்ணிக்கையையும் பரந்து கிடக்கும் தன்மையையும் கருத்தில் கொண்டு குறுகிய கால அளவில் கூடுதலான ஸ்தலங்களைக் கண்டு தொழுதற்கு வசதியாக இதற்கு முன் யாத்திரை செய்த அன்பர்களின் துணைகொண்டு பிரயாணத் திட்டம் வகுக்கப்பட்டது. எங்கள் திருத்தலப் பயணத்தில் தலயாத்திரைகள் செய்யும் போது தங்க இடம், உணவு, வாகனவசதி ஆதியனவும், வழிகாட்டிகளும் இன்ன பிறவும் தந்து பலவகையாலும் உதவியோர் பலர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆத்ம ஜோதி நிலையத்தினரின் சார்பில் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பெரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திரும்பியதும் அது பற்றிப் பேசி மகிழ்வது இயல்பு. ஆகவே எங்கள் திருத்தலப்பயணத்தைப் பற்றிய நல் நினைவுகளையும் பயனையும் ஏனையோரும் பெறவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதன் பயனே இக்கட்டுரையை எழுதத் தூண்டியது. அங்கம் பெற்ற பயன் ஆண்டவனை வழிபடுவதே என்றார் அப்பர் சுவாமிகள். இதனாலேயே அரசர்களும் அடியார்களும் ஆங்காங்கு ஆலயங்கள் எழுப்பினர். ஒவ்வொருதலத்தையும் கண்டு வணங்க கடும் பிரயாணங்களை மேற் கொண்டனர். தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாடல்களை திருத்தலங்கள் தோறும் பாடிப்பரவினர். இதனால் தாங்கள் பயன் அடைந்ததோடு ஏனையோரும் பயன் பெற வகை செய்தனர் எனவே இந்துவாகப்பிறந்தவர் ஒவ்வொருவரும் தமது ஆயுள் காலத்தில் ஒரு தடவையேனும் தலயாத்திரை செய்ய வேண்டும் என்பது எனது எண்ணம். தலயாத்திரை மனத் தூய்மையை அளிக்கிறது.

இலங்கை, இமயம் உட்பட தேவாரத்தலங்கள் 275 திவ்வியப்பிரபந்தத் தலங்கள் 108. திருவாசகத்தில் வந்துள்ள தலங்கள் 45 திருவிசைப் பாத் தலம் 14, இவை தவிர மேலும் பல சிவன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்பிகை கோயில்கள், அடியார்

கோயில்கள், முருகன் கோயில்கள், பிரசித்தி பெற்றவை. பாடல் பெற்ற கோவில் ஒவ்வொன்றிலும் அத்தலத்திற்குரிய தேவார, திருவாசக, திவ்வியப் பிரபந்தப்பாசுரங்களைப்பாடி வணங்கினேம். நாம் பாடுவதற்கு வசதியாகவும் சரித்திர உண்மைகளை அறிவதற்கு ஆதாரமாகவும் பாடல்கள் அழியாத சித்திரமாகப் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இனி எமது திருத்தல யாத்திரையில் தரிசனம் பெற்ற ஒரு சில ஸ்தலங்களைப் பற்றிய சிறப்பை ஆராய்வாம்.

சிதம்பரம் கோயில் என்றுலே சிதம்பரத்தைக் குறிக்கும். தில்லை நடராசன் சிதம்பரம் மூவர் தேவாரம் பெற்றதோடு திருவாசகத்தால் பெரிதும் சிறப்பிக்கப் பெற்றது. திருவாசகத்தில் 65 இடங்களில் சிதம்பரம் கூறப்படுகிறது. திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமான் திருவாசகத்தின் பொருள் 'கூத்தப்பெருமானே' என்று காட்டித் தில்லைத் தலத்திலேயே கூத்தப்பெருமான் திருவடி நிழலில் இரண்டறக்கலந்தார். தேவார திருவாசகம் தவிர பன்னிரு திருமுறைகள், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினெராம் திருமுறை, பெரியபுராணம் அனைத்திலும் தில்லைக் கூத்தன் பெருமை பேசப்படுகிறது.

சீர்காழி திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் பிறந்தருளிய தலம். அதிகமான தேவாரப் பதிகம் பெற்றது இத்தலமே. சம்பந்தப் பெருமானுக்கு அம்பிகை ஞானப்பால் கொடுத்தது இத்தலத்தில் தான். சம்பந்தர் உருவம் இங்கு பேரழகுடன் காட்சி தருகின்றது. சிவன் கோயிலுக்குள் சம்பந்தருக்கு ஒரு தனிப் பெரியகோயில் இங்கு இருக்கின்றது. சம்பந்தரின் முதல் தேவாரம் எழுந்தது இத்தலத்தில் தான். கட்டு மலையில் உயரமான இடத்தில் தோணியப்பரும் அதற்கு மேல் தளத்தில் சட்டை நாதரும் காட்சி யளிக்கின்றனர்.

**திருப்புன்கூர்:**

இறைவன் — இறைவி

சிவலோகநாதர் — சொக்கநாயகி

திருநாளைப் போவார் நாயனர் என்னும் நந்தனருக்காக இறைவன் நந்திதேவரை விலகி இருக்கச் செய்த தலம்.

திருவானைக்கா: ஜம்புகேசுரம்
இறைவன்: ஆனைக்கா அண்ணல்
இறைவி: அகிலாண்டநாயகி

சிலந்தியும் யானையும் வழிபட்ட தலம். வெள்ளையானை வழிபட்ட காரணத்தால் இத்தலம் ஆனைக்கா என்னும் பெயர் பெற்றது. சிவலிங்கத்தின் அடியில் இருந்து ஊற்றுப் பெருக்கெடுத்து வந்து கொண்டிருக்கிறது. முற் பிறவியில் சிலந்திப் பூச்சியாக இருந்து ஆனைக்காவை வழிபட்டவரே பின்னர் கோச்செங்கட் சோழநாயனராகப்பிறந்து எழுபது சிவபெருமானுக்குரிய மாடக்கோயில் கட்டினர் என்பது வரலாறு.

**திருச்சிராப்பள்ளி:**

இறைவன்: தாயுமானவர்
இறைவி: மட்டுவார் குழலி

கோயில் இருக்கும் இடத்திற்கு மலைக்கோட்டை என்று பெயர். நடு ஊருக்குள் ஓர் குன்றின் மீது கோயில் இருக்கிறது. அதற்கு மேல் மலை உச்சியில் உச்சிப்பிள்ளையார் கோயில் இருக்கிறது. இறைவன் ஓர் பெண்ணின் மகப் பேறு காரணமாகத் தாயாக வந்தமையால் ''தாயும் ஆனவர்'' என்று பெயர் பெற்றார். பின்னளில் சைவம்

தழைக்க பல அரிய பாடல்கள் பாடிய 'தாயுமான சுவாமிகள்' இக் கடவுள் பெயரையே தாங்கி இருந்தார்.

### குடந்தைக்காரோணம்:

இறைவன் காசி விசுவநாதர்
இறைவி காசி விசாலாட்சி

இங்கே நவகன்னியர்கள் திருவுருவங்கள் இருக்கின்றன. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் மகா மகம் இங்கு பிரசித்தி பெற்ற கொண்டாட்டமாகும்.

### திருநள்ளாறு

இங்கு சனீசுவரன் கோயில் முக்கிய மானது. நளச்சக்கரவர்த்தி வழிபட்டு சனிதோஷம் நீங்கிய தலம் இதுவே. கோவிலுக்குப் பக்கத்தில் நளதீர்த்தம் உண்டு. இதில் ஏராளமான மக்கள் சனிதோஷம் நீங்க நீராடுகின்றனர்.

**சிக்கல்:-** வெண்ணெய் நாதர்
வேல் நெடுங் கண்ணி

இங்கே அழகே வடிவமாக சிங்கார வேலர் சன்னிதி இருக்கிறது. கோவில் பெரியது, தங்க வாகனங்கள் நிறைய உள்ளன. கோவிலுக்கு வட பக்கத்தில் கோல வாமனப் பெருமாள் சன்னிதி இருக்கின்றது.

### திருவாரூர்

வன்மீகநாதர் — அல்லியங் கோதை
புற்றிடங்கொண்டஈசர் — கமலாம்பிகை

கோவிலுக்குத் திரு மூலட்டானம் என்றும் பூங்கோயில் என்றும் பெயர். ஐம் பெரும பூதத்தலங்களுள் ஒன்று இது. ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்பார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். பெரிய புராணத்திற்கு மூலகாரணமாக இருந்தது இத்தலமே. சுந்தர மூர்த்தி சுவாமிகள் கதையில் பெரும் பகுதி நடந்தது இங்குதான். பரவையார் வாழ்ந்தது இப்பழம் பதியிலேயே, மனுச்சோழன் நீதி செலுத்தியதும் இத்திருவாரூரிலேயே. உலகிலேயே பெரியதேர் திருவாரூர்த் தேர்தான். கோவில் மிகப் பெரியது. நான்கு புறமும் கோபுரங்கள் கொண்டது. கோவிலுக்கு எதிரில் இருக்கும் கமலாலயம் என்னும் திருக்குளம் பெரியது.

## மதுரை (திரு ஆலவாய்)

சொக்கலிங்கம் — மீனாட்சி
சோமசுந்தரம் — அங்கயற் கண்ணி

கண்ணுதற் பெருங் கடவுள் சங்கப் புலவர்களோடு அமர்ந்து தமிழ் ஆராய்ந்த தனிச் சிறப்புடைய பெரு நகரம். பாண்டி நாட்டின் தலை நகர். இறைவன் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் நிகழ்த்திய பழம் பதி. மணிவாசகப் பெருமான் பாண்டிய மன்னனுக்கு அமைச்சராக இருந்து அரசாண்ட அரும்பதி. மங்கையர்க் கரசியார் வாழ்ந்த நகரம். திருவாசகத்தில் இத்தலம் ஒன்பது இடங்களில் பாராட்டப் பெறுகிறது. 'கலிமதுரை' என்று திருவாசகம் கூறியதற்கேற்ப ஆரவாரம் நிறைந்த மதுரையாகவே காட்சியளிக்கிறது. குமர குருபர அடிகள் மதுரை மீனாட்சிக்கு அரிய பிள்ளைத் தமிழ் பாடினார். போரூர்ச் சிதம்பர சுவாமிகள் மீனாட்சி கலி வெண்பா பாடியுள்ளார். சம்பந்தர் அப்பரும் இத்தலத்தைப் பாடிப்பரவியுள்ளனர்.

### திருப்பரங்குன்றம்

பரங்கிரி நாதர் — ஆவுடைநாயகி

முருகக்கடவுளுக்குரிய ஆறுபடை வீடுகளில் ஒன்று. முருகன் தெய்வயானையைமணம் புரிந்த தலம் இதுவே. எனவே முருகன் பின்னே மணந்த

வள்ளியம்மை உருவம் இங்கே இல்லை.

## திருநெல்வேலி

நெல்லையப்பர் — காந்திமதி

இங்கு அழகிய தாமிரவருணி என்னும் ஆறு ஓடுகிறது. பஞ்ச சபைகளில் ஒன்றாகிய 'தாமிரசபை' யை உடையது. இக்கோவிலில் உள்ள ஆறுமுகக் கடவுளுடைய பெரிய திருஉருவம் மிக்க அழகுடையது.

## திருவண்ணாமலை

அண்ணாமலையார் — உண்ணாமுலையாள்

திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிக்காண முடியாத தலம் இது. பஞ்ச பூதத் தலங்களுள் இதுவும் ஒன்று. நெருப்புத்தலம் என்பர். கோயில் மலையின் அடிவாரத்தில் இருக்கிறது. திருக்கார்த்திகை விழா இங்கு சிறப்புடையது. மலையின் உச்சியில் பேரொளியுடன் கூடிய விளக்கு ஏற்றப்படுகின்றது. 'அண்ணாமலை தீபம்' என்றே அதற்குப் பெயர். அருணகிரிநாதர் வாழ்ந்த ஊர். ஆகஸ்ட் 15ல் இங்கு அருணகிரியாருக்குப் பெருவிழா எடுக்கின்றனர்.

மலைச்சுற்றில் அணி அண்ணாமலை என்ற சிவன் கோவில் இருக்கிறது. குகை நமசிவாயர், குரு நமச்சிவாயர், ஈசான ஞானதேசிகர், ரமண மகரிஷிகள் முதலான தபோதனர்கள் வாழ்ந்த பழம் பதி இது.

## கச்சி ஏகம்பம் (காஞ்சீபுரம்)

ஏகாம்பரநாதர்

மிகப்பழமையான பதி. அந்நாளில் சிவன் கோவில்களில் அம்பிகை சந்நிதி அமைப்பதில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன காஞ்சிக் கோவில்கள். காஞ்சி காமாட்சி அம்மனுக்கு ஒரு தனிக்கோவில் இருக்கிறது. அங்கு இறைவன் திருஉருவம் இல்லை. காமாட்சி அம்மனுக்கு அறம் வளர்த்த நாயகி என்றொரு பெயர். பாடல்கள் பெற்ற சிவன் கோவில்கள் பல, குமர கோட்டம், திவ்வியப் பிரபந்தம் பெற்ற திருமால் கோவில்கள் பல இங்குள்ளன.

## திருக்காளத்தி: (காளஹஸ்தி)

காளத்தி நாதர் - ஞானப்பூங்கோதை பொன்முகலி ஆற்றின் கீழ்க்கரையில் காளத்தி மலை அடிவாரத்தில் இருக்கிறது இத்தலம். மேற்குப்பார்த்த சன்னிதி. இறைவன் சன்னிதியில் ஒரு தூண்டாமணி விளக்கு காற்றில் அசைவது போல் அசைந்து ஆடி எரிந்து கொண்டிருக்கிறது. எனவே ஐந்து பூதத்தலங்களுள் இது காற்றுத்தலம் என்பர். கண்ணைப் பிடுங்கி கடவுளுக்குக் கொடுத்து செயற்கரும் செயலைச் சாதித்த கண்ணப்ப நாயனர் வழிபட்டு முத்தியடைந்த தலம். கண்ணப்பர் திருவுருவம் சிலைவடிவத்தில் சிவபெருமான் திருமுன்னர் நிற்பதைக் காணலாம்.

## திருவொற்றியூர்

மாணிக்கத்தியாகர்-வடிவுடையம்மை சுந்தர மூர்த்தி சுவாமிகள் சங்கிலி நாச்சியாரை மணம் புரிந்த பழம் பதி. சுந்தரர் சங்கிலியார் திருதிருவங்கள் மணக்கோலத்தில் காட்சி யளிக்கிறன. முற்றத் துறந்த பட்டினத்தடிகள் வாழ்ந்து முத்தி அடைந்த பழம் பதி இது. கோவிலுக்கு அண்மையில் கடல் இருக்கின்றது. கடலோரத்தில் பட்டினத்தடிகட்கும் அப்பர் சுவாமிகட்கும் தனித்தனிக் கோயில்கள் இருக்கின்றன.

### வடதிருமுல்லைவாயில்

மாசிலாமணிநாதர் - கொடியிடை நாயகி

சுவாமி சன்னிதியில் இரண்டு எருக்கம் தூண்கள் இருக்கின்றன. தன் யானையைச் சுற்றிக் கொண்ட முல்லைக் கொடியைத் தொண்டைமான் வெட்டும்போது இறைவன் திருமேனியில் பட அதற்கு வருந்திய தொண்டைமானுக்கு அருள் சுரந்தார் இறைவன். அவ்வாளின் வடு சிவலிங்கத்தின் மேல் காணப்படுகின்றது. 'வெட்டுத் தாங்கிய ஈசர்' என்று இறைவன் அழைக்கப்படுகின்றார்.

### மயிலாப்பூர் (திருமயிலை)

கபாலீசுரர் — கற்பகவல்லி

சென்னை மாநகரிலுள்ள தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. கோவிலுக்கு எதிரில் பெரிய தெப்பக் குளம் உண்டு. தேவியார் மயில் வடிவாக இருந்து இறைவனை வழிப்பட்டமையால் இப்பெயர் பெற்றது. திருஞான சம்பந்தர் இறந்து போன பூம்பாவை என்ற பெண்ணின் எலும்பைத் தேவாரம் பாடி உயிர்ப்பித்த தலம். இக்கோயிலில் திருஞான சம்பந்தர் திருவுருவமும், பூம்பாவை வடிவமும் இருக்கின்றன. அறுபத்து மூவர் திருவிழா இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் பிறந்து அருளிய தலம் இது.

### திரு அரங்கம் (ஸ்ரீரங்கம்)

அரங்கநாதர் — அரங்கநாயகி

காவிரி - கொள்ளிடம் ஆகிய இரண்டு ஆறுகளுக்கிடையே கோயில் இருக்கிறது. கோவில் மிகப்பெரியது. அரங்கநாதர் பள்ளிகொண்டிருக்கிறார். சைவர்களுக்கு தில்லையம்பலம் எப்படியோ அத்தகையது வைணவர்களுக்கு திரு அரங்கம்.

### திருக்குடந்தை (கும்பகோணம்)

சாரங்கபாணிப் பெருமான்
கோமளவல்லி

கும்பகோணத்தில் சக்கரபாணி கோயில், இராமசுவாமி கோயில் முதலிய பெருமாள் கோயில் நிறைய இருப்பினும் ஆழ்வார் மங்களா சாசனம் பெற்ற கோயில் இதுவே. கும்பகோணம் நகரத்தில் தேவாரம் பெற்ற சிவன்கோவில்கள் மூன்று இருக்கின்றன. பாடல் பெறாத கோவில்கள் மிகப் பல. கோயில் பெருத்தது கும்பகோணம் என்பது பழமொழி. எங்கு பார்த்தாலும் குடந்தை நகருள் வானளாவிய கோபுரங்களைக் காணலாம்.

### திருமாலிருஞ் சோலை மலை (அழகர்கோயில்)

மாலலங்காரர் - அழகர் - சுந்தரவல்லி

ஆறுபடை வீட்டினுள் ஒன்றாகும் பழமுதிர் சோலை என்பர். முருகன் கோயிலைத் திருமால் கோயிலாக மாற்றப் பெற்றிருப்பதாக கூறுகின்றனர். சித்திரைப் பூரணையில் இங்கு நடக்கும் விழா சிறப்புடையது என்பர். மலையின் மீது சிலம்பாறு என்னும் நூபுர கங்கை உண்டு.

### திருவேங்கடம் [திருப்பதி]

திருவேங்கடத்தான் — அலர் மேல் மங்கைத் தாயார்

மலை உச்சியில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் செல்வத்திற் சிறந்த கடவுள் வேங்கட நாதர். ஆண்டு தோறும் கோடி வருமானம் உண்டு எந்த நேரத்திலும் வேங்கட நாதனைக் கண்டு வணங்குதல் எளிதன்று. புலவர்கள் பாராட்டுதலிலும் திருவேங்கட முடையார் ஒன்றும் குறைந்தவரல்லர் எனப் பாடியுள்ளனர். ஏராளமான பாடற் செல்வத்தினையும் பெற்றவர்.

கன்னியாகுமரி முதல் திருவேங்கடம் வரை பல ஸ்தலங்களைத் தரிசித்து மன நிறைவு பெற்றோம். விரிவஞ்சி மற்றும் ஸ்தலங்கள் பற்றி விபரிக்கவில்லை. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

# அம்பாளின் அருள் நோக்கு

*[ஸ்ரீமத் ஸ்ரீரங்கானந்த சுவாமிகள் - ஸ்ரீராமகிருஷ்ணமிஷன், கொழும்பு]*

*ஸர்வமங்கல-மாங்கல்யே சிவே ஸர்வார்த்த—ஸாதிகே!*
*சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே!!*

மெய்யன்பர்களே,

இந்த ஐப்பசியில் சாரதா நவராத்திரியைக் கொண்டாடி விஜயதசமியோடு நமது சக்தி வழிபாட்டை முடித்தோம். நம் உள்ளமெல்லாம் தேவியினது உபாசனையில் ஈடுபட்டுள்ள இச் சூழ்நிலையில், ''அம்பாளின் அருள் நோக்கு'' என்னும் பொருள் பற்றிச் சிந்திப்பது சாலப் பொருந்தும்.

''சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புது மலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியாவரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே''

என்பது அபிராமி பட்டரின் திருஅருள்மொழி. வடமொழி கவி சிரேஷ்டரான காளிதாஸரும்,

''வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தௌ
(வாகர்த்தா ப்ரதிபத்தயே)!
ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ பரமேச்வரௌ!!''

''சொல்லும் பொருளும் போல சேர்ந்திருப்பவர்களும் உலகத்திற்கு, தாய் தந்தையருமான பார்வதீ பரமேச்வரனை (சொல்பொருள் இவைகளை அறியும் பொருட்டு) நமஸ்கரிக்கின்றேன்'' என்று பிரார்த்திப்பதைப்போலவே, அபிராமபட்டரும்,

''சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே!''

என அம்பிகையை அழைக்கின்றார். அம்பிகையின் அருள் நோக்கு அழியா அரசையும், கைக் கொண்ட தவநெறியும், சிவலோக சித்தியும் தர வல்லது என்ற உறுதிமொழி அனுபூதி செல்வமாகும்.

சொல்லும் பொருளும் போல, சூரியனும் அதன் பிரகாசமும் போல, மணியும் அதன் ஒளியும் போல —நிர்குணப் பரம்பொருள் ஸகுணமாய்-சிவ சக்தியாக உள்ளது. கிரியை யற்றதாகக் கருதும்போது அது பிரம்மம் அல்லது சிவ சக்தியாக உள்ளது. கிரியை யற்றதாகக் கருதும் போது அது பிரம்மம் அல்லது சிவம் எனப்படுகின்றது. படைத்துக் காத்து அழிக்கும் போது சக்தி எனப்படுகிறது. ''ஸ்ருஷ்டி ஸ்த்திதி விநாசானும் சக்திபூதே ஸநாதனி! குணாச்ரயே குணமயி .....'' என்கிறது சப்தசதி! எல்லாக் குணங்கட்கும் உறைவிடமாய் விளங்குபவளாகிய பராசக்தி, குணங்களையே வடிவாய்க் கொண்டு பஞ்ச க்ருத்தியங்களை ஆற்றும் போது, தன்னை சரணடைந்தார்க்குத் 'தாயாக' அருள் பாலிக்கின்றாள்.

எனவே, பரம்பொருளை, அன்னை பராசக்தியாக யாவர்க்கும் வழிபடுவது எளிய

சாதனையாகும். தேவிவழிபாட்டில்எல்லா வர்ணத்தார்க்கும், ஆடவர்க்கும் பெண் டிர்க்கும் சம உரிமை உண்டு. கம்பர், காளிதாஸர், மூககவி, வித்யாரண்யர், ராமகிருஷ்ணர், அபிராமபட்டர் ஆகி யோர் தேவி பக்தர்கள். அனுபூதிமான் களாவர். அன்னை பராசக்தியை உள் ளன்புடன் வழிபட்டால் எல்லா தேவ-தேவீ—ஸ்வரூபிணியாகிய அவளே எல் லாத் தேவதைகளேயும் தன்னிடம் காட்டி அருளுகின்ருள். எல்லாக்கொள் கைகளும் - சித்தாந்தங்களும் வேதாந்த மும் அங்கு ஸமரஸத்தன்மையை அடை கின்றன என்பது ஆன்ருேரின் கருத்து.

பராசக்தியை தேவியாக வழிபடும் போது, ஜகஜ்ஜனீ ஆன லோக மாதா, ''தாயாக'' - பெண்மை வடிவத்தில் நமக்கு காக்ஷி அளிக்கின்ருள். அப் போது ராஜராஜேஸ்வரியாக, திரிபுர ஸுந்தரியாக வீற்றிருக்கும்போது, அவ ளது உடலெல்லாம் மூடப்பட்டிருக்கின் றது. ஆயினும், அருள் பொழியும் முக மண்டலமும் மருள் நீக்கும் திருவடிக ளுந்தான் நாம் காணத் தகுந்த திவ் விய பாகங்களாக வெளியே தோன்று கின்றன. அன்னையின் அருள் முகமும் திருவடியும் நமக்கு உரியவைகளன்ருே!

நீலோத்பலத்தின் அழகையும் மீன் களின் அழகையும் வெல்லும் அவளது கண்கள் விசாலமாயும் அருளும் தன் மையும் வாய்ந்திருத்தலால், மீனாக்ஷி, விசாலாக்ஷி, காமாக்ஷி என திவ்விய நாமங்களை ஏந்துகிருள்!

சர்வேச்வரியின் திருக்கண்கள் சற்று திறந்தும் சற்று மூடினது போன்றும் இருக்கின்றது. ஆனல் கண்களை அவள் மூடினுலோ புவனங்கள் எல்லாம் அழி ந்து போம்!

"உன்மேஷ நிமிஷோத்பன்ன-விப ன்ன புவனாவலீ'' கண்களைத் திறப்ப தாலும் மூடுவதாலும் புவனங்களை ஆக்கி அழிப்பவள் என்று, ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (281) கூறுகின்றது.

''நிமேஷோன் மேஷாப் யாம் ப்ரலய-
முதயம் யாதி ஜகதீ,
தவேத்யாஹுஃ ஸந்தோ தரணிதர-
ராஜன்ய தனயே'' (55)

பர்வதராஜ குமாரியே! உன்னு டைய கண்கள் மூடுவதாலும் திறப்ப தாலும் உலகம் பிரளயத்தையும், சிருஷ் டியையும் அடைகிறது என்று சான் ருேர் கூறுகின்றனர் என்கிறது ஸௌந் தர்ய லஹரி! அவ்வளவு திறம் பெற் றவைகள் அவளது கண்கள்! தன்னை அண்டி வந்தவர்க்கு அருள் பாலிப்பவை அத் திருக் கண்களேயாகும்.

அதுபோலவே, அம்பிகையின் திரு வடிகளும் மஹிமை வாய்ந்தவை. அத் திருவடிகளில் வேதங்கள் வணங்குகின் றன. வேதங்கள் பிரம்ம ஞானத்தை அளிப்பதனுல் வேதமாதா எனப்படுகின் றன. அவ் வேதமாதா பரமேச்வரியை வணங்கும் போது அன்னையின் பாத தூளிகள் வேதமாதாவின் வகுட்டில் விளங்கும் ஸிந்தூரமாக விளங்குகின்ற னவாம்!

''ச்ருதி - ஸீமந்த - ஸிந்தூரீ - க்ரு த - பாதாப்ஜ தூலிகா''

[எவள் பாத கமலத்தின் தூளியே வேதமாதாவின் வகுட்டில் விளங்கும் ஸிந்தூரமோ அவள்] என லலிதா ஸஹ ஸ்ரநாமம் [2·9] முழங்குகிறது!

வேதத்திற்குத் தலையாக உள்ளது உபநிஷதம். தேவியின் பாத தூளியின் மகிமையே உபநிஷதமாகிறது. அங்ங னம் சிந்திப்பவர்களுக்கே உபநிஷத்தின் பொருள் விளங்கும் என்பது ஆன்ருே ரது அனுபவ சித்தாந்தம். எனவே ஸௌந்தர்ய லஹரியிலும்,

''ச்ருதீனும் மூர்த்தானே த தாதி
தவ யொ சேகரதயா

மமாப்யேதௌ மாத: சிரஸி தயபா
தேஹி சரணௌ தாயே!'' (84)

உன்னுடைய எந்த பாதங்களை, வேதங்களின் தலைபோன்ற உபநிஷதங்கள் சிரோபூஷணங்களாக தரிக்கின்றனவோ, அந்த பாதங்களை என்னுடைய தலையிலும் கூட தயை கூர்ந்து வைத்தருள்வாயாக என்று ஸ்ரீ சங்கர பகவத் பாத சுவாமிகள் விண்ணப்பிக்கின்றார்.

உபநிஷதங்கள் பெரும்பாலும் நிர்க்குணப் பிரம்மத்தைப் பற்றிப் பேசுவதால் அது 'பிரம்மவித்யா' எனப்படும். அதையறிந்து அனுபவத்தில் கொண்டுவர வழிகாட்டுகிறது 'ஸ்ரீவித்யா'' அதாவது தேவி உபாஸனை என்பார்கள். முடிவில் இரண்டும் ஒன்றே. அம்பிகையின் சரணாரவிந்த மகிமையால் மெய்ஞ்ஞானம் வந்து எய்துகிறது என்பதுதான் தாத்பர்யம்.

மேலும், அம்பிகையின் திருவடிக் கமலங்கள் மனிதனுக்கு வறுமை, துன்பம், துக்கம், பயம், பீதி ஆகியவற்றிலிருந்தும் பாதுகாப்பு அளிக்கின்றன. அது மட்டுமோ? லோகானாம் சரண்யே!

உலகிற்குப் புகலிடமே! பயத்திலிருந்து காப்பாற்றவும் வேண்டியதற்கு அதிகமாகவே பயனை அளிப்பதற்குங் கூட உன்னுடைய திருவடிகளே திறமையுடையவைகள் அன்றோ-

''பயாத் த்ராதும் தாதும் பலமபி ச
வாஞ்ச்சா ஸமதிகம்,
சரண்யே லோகானாம் தவ ஹீ சரணா
வேவ நிபுணௌ''

என்று ஆசார்ய சுவாமிகள் வியந்து அப்பாத கமலங்களின் நிகரற்ற சக்தியைப் போற்றுகின்றார். நமது குறிக்கோளும் அத் திருவடிகளேயாம்.

''உடைத்தனை வஞ்சப் பிறவியை - உள்
ளம் உருகும் அன்பு படைத்தனை
பத்ம பதயுகம் சூடும் பணியெனக்கே
அடைத்தனை
நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின்
அருட்புனலால் துடைத்தனை
சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லு
வேத''

என்று அபிராமிபட்டரும் பரவசமாகின்றார்.

எனவே, அம்பிகை ஓர் அருட்கடல். வஞ்சப்பிறவியை உடைப்பவளும் உருகு உள்ளம் படைப்பவளும் ஆன அவள், இரு கமலத்தாள்களை நம் தலையில் சூடும் பணியை நமக்கு அருளி, நெஞ்சத்துள்ள அழுக்கையெல்லாம் அருட்புனலால் துடைக்கும் சுந்தரியே அவள்! அவளை நாடி ஓர் அடி முன் வைத்து அம்மா, அம்மா என்றால் கருணைக் கடலாகிய அவள் ஒன்பது அடி முன்னோடி வந்து நம்மை ஆட்கொள்வாள். அவளது அருள் நோக்கு அத்தகையது!

ஆனால், நாமோ குழந்தையைப் போன்றிராமல், குழந்தைத் தனத்தால் உலக வாழ்வு எனும் வீட்டில் மூழ்கி விளையாட்டு விளையாட்டமாகி மாகமீதூர சம்சார பந்தத்தில் கட்டுண்டு வாடி வதங்கி திணறும் போதும் தேவியை நாடாது விழிக்கின்றோம். கள்ளுண்ட போதையில் ஒருவன் சேற்றில் விழுந்து புரண்டு கொண்டே மயக்கம் தெளியாதவனைப்போல் நாமும் மோஹ மாயை சேற்றில் அவதிப்படுகின்றோம். அவளை சற்று சிந்தித்து வேண்டினால், உள்ளம் உருக நினைத்தால் அன்னை அருள் பாலிப்பாள். நமக்கும் அறிவும் தெளிவும் அமைதியும் கிடைக்கும்.

பூரணமாக, குழந்தை போல் அவளிடம் சரணடைய வேண்டும். அப்போது திவ்வியமான கண்களிலிருந்து அருள் நோக்கு கிட்டும்.

தவறினால், யாதுமாகிய பராசக்தி

தன் ரௌத்ராகாரத்தை மேற்கொண்டு தன் விளையாட்டைக் காட்டத் தொடங்கி விடுவாள்! அவளோ மஹாமாயை! அவளுடைய சக்தி அளவிட முடியாதது. அவளால் உலகம் மயக்கப்படுகின்றது. ஞானிகளுடைய சித்தங்களையும் அந்த மஹாமாயா தேவியான பகவதி வலுவில் கவர்ந்து மோஹத்தில் செலுத்த வல்லவள். வழிக்கு வராத குழந்தை அன்பான தன் தாயிடம் மொத்துண்டு, அழுது, துவண்டு துன்பம் அனுபவிப்பது போல் - பக்தி, பணிவு, அறிவு அற்ற ஒருவன் அன்னையால் ஆட்டி வைக்கப்படுகிறான்! அவளிடம் சரண் புகுந்தக்கால் அவளே அழகியாய், சாந்த சொரூபிணியாய், மங்களகரீயாய், திருமகளாய், கலைமகளாய், உமையாய், உண்மையாகக் கருணைபொழிகின்றாள்! என்னே அவளது காருண்ய கடாக்ஷ மஹிமை!

அன்னை பராசக்தியின் அருள்நோக்கை நாடிப் பணிவன்புடன் குழந்தையுள்ளம் படைத்தவராய், கள்ளங்கபடு அற்று யாவற்றையும் துறந்து, திறந்த நெஞ்சினராய் பிரார்த்தித்தல் வேண்டும். ஸ்ரீ சங்கர பகவத் பாத சுவாமிகள் நம் பொருட்டு தன்னையும் ஒரு தீனன் எனக் கூறி ஸௌந்தர்யலஹரியில் பிரார்த்திக்கின்றார். ஆச்சார்யரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமும் பிரார்த்திப்போமாக.

''த்ருசா த்ராகீ யஸ்யா தர தலித
நீலோத் பல - ருசா,
தவீயாம்ஸம் தீனம் ஸ்நபய க்ருபயா
மாமபி சிவே|
அநேனாயம் தன்யோ பவதி ந ச தே
ஹானி - ரிய தா.
வனே வா ஹர்ம்யே வா ஸமகர
நிபாதோ ஹிமகர:||''

[ஸௌ. ல. 57]

மங்கள ஸ்வரூபியே! நீண்டதும், சற்று மலர்ந்த கருநெய்தல் போன்று பிரகாசிக்கின்ற உனது பார்வையால் உனக்கு வெகு தொலைவில் இருக்கும் ஏழையாகிய என்னையும் கூட, கருணை கொண்டு நீராட்டி வை, தாயே! அதனால் இவன் உன் அருட்செல்வம் பெற்றவனாக ஆகி விடுவான். இதனால் உனக்கு ஒரு நஷ்டமுமில்லை. அம்மா! கூட்டிலாயினும், நாட்டிலுள்ள மாளிகையிலாயினும் தனது குளிர்ந்த கிரணங்களைச் சமமாகவே பொழிகின்றான். அதனால் சந்திரனுக்கு என்ன நஷ்டம்? தாயே! உன் அருள் என்னை உய்விக்கும். அதனால் உனக்கு எவ்வித குறைவுமில்லை. நானோ; தன்யன் ஆகி விடுவேன்''

இத்தகைய பிரார்த்தனை நமது உள்ளத்தில் நம்பிக்கையையும் உத்வேகத்தையும் உண்டாக்குகின்றது. பராசக்தியின் அருள்நோக்கு நமது குறைகளை நீக்கி நிறைவை பேரின்பத்தைத் தரத்தக்க திறமை வாய்ந்தது.

[28.5.1966ம் தேதி இலங்கை வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டது. இவ்வுரை அவர்களின் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.]

# பக்தியே ஆண்டவனைப் பிடிக்கும் வலை

(மாத்தளை - அருணேசர்)

உலகில் பிறந்த எறும்பு முதல் புல் பூண்டுகள் உட்பட எல்லாப் பிராணிகளும் தமக்குத் தெரிந்தோ தெரியாமலோ முக்திப் பேற்றை அடைவதற்கு அந் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. அதிலும் பகுத்தறிவுள்ள மக்கள் தாம் வந்த வரவை மறவாமல் நினைந்து, உண்டு உடுத்து உறங்குவதே சுகமென நினையாமல் அந்நிலையடைவதன் பொருட்டுத் தீவிரமாக முயற்சி செய்கின்றனர். இதனை இறைவனிடம் நம்பிக்கை வைத்து அவனை அடைந்து சதா காலமும் அழிவற்ற ஆனந்தம் அநுபவிப்பது அல்லது அவனோடு இரண்டறக் கலந்து ஐக்கியப்படுவது எனக் கொள்வர். இந் நிலையை அடைதற்கான வழி யாது? இதற்கு ஏதாவது ஒரு சாதனம் அத்தியாவசியமாகின்றது. இச் சாதனம் பல வகைகளாய் உள்ளன. அவற்றில் முதலாவதானது பக்தி அல்லது வழிபாடு. இது வணங்கல், பூசித்தல், ஆராதனை செய்தல் எனவும் கூறப்படும்.

இறைவனை அடைவதற்கு ஒவ்வொரு யுகத்திலும் வெவ்வேறு வழிகளை உலகினருக்குப் புகட்டினார்கள் பெரியோர்கள். கிரேதாயுகத்தில் பல ஆண்டு காலம் தியானத்தைச் செய்து வந்தவனும், திரேதாயுகத்தில் பற்பல யாகாதி கர்மங்களைச் செய்து வந்தவனும் துவாபரயுகத்தில் அர்ச்சனை முதலியவைகள் செய்து அபிஷேகாதி பூஜைகளைச் செய்தவனும் எந்த விதமான பலனை அடைவானோ அதே பலனை இக் கலியுகத்தில் இறைவனை மனமாற வணங்குதல் மட்டுமே செய்பவன் அடைகின்றான் என்பது அவ்வான்றோர் கண்ட வழி. கலியில் வணக்கமுறை அல்லது பக்திமார்க்கம்தான் சிறந்தது என்பதேனெனில் கலியுகத்திலே மனிதனுக்கு யோகஞ் செய்யவோ தபம் செய்யவோ நேரம் இல்லை; உடல், உளம் ஆகியவற்றில் அதற்கேற்ற வலிமையும் இல்லை. பக்தி மார்க்கம் எல்லோராலும் எச் சமயத்தாராலும், எந்தச் சமயத்திலும் எப்போதும் அனுஷ்டிக்கத் தக்கதும், எவ்விதத்திலும் மிக்க எளிதானதுமான வழியாகும். பக்தியாகிய அன்பிற்கே கடவுள் திருவுள்ளம் கொள்ளுகின்றார். பக்தியே ஆண்டவனைப் பிடிக்கும் வலை. ''பக்தி வலையிற் படுவோன் காண்க'' என்றார் ஆளுடைய அடிகள். இறைவனை உபாசனை செய்வதால் சகலவித நன்மைகளையும் அடையலாம் என்பது நிச்சயம். இதனால் இந்த எளிதான பக்தி மார்க்கத்தை ஆன்றோர் கற்பித்தனர்.

இப் பக்தி மார்க்கத்தை - தெய்வ உபாசனையை ஐந்து அங்கங்களாக அவ்வான்றோர் வகுத்துள்ளனர். அவை ஸ்தோத்திரம், வந்தனம், தியானம், அநுதாபம் பிரார்த்தனை என்பன. இவ்வித உபாசனையைச் செய்பவர் மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றாகித் தூய்மையுடன் செய்வதே முறை என்பதும் பெரியோரின் வழியாகும். எப்படியெனில், (1) மனத்தால் அக் கடவுளின் பெயர்களையும், அவன் குணங்களையும் குறிகளையும் பரோபகாரங்களையும் சிந்தித்து வியத்தல்; (2) வாக்கால் அங்ஙனம் சிந்தித்து வியந்தனவற்றைப் பேசுதல்; (3) காயத்தால் அக் கடவுளின் ஆலயத்தை வலம் வருதல், அரிய பணிகளைப் புரிதல் முதலியனவாம். இவ்விதமன்றி முக்கரணங்களும் வேறுபட்டுச் செய்யும் பக்தி உபாசனை பயன் அற்றதாகும்.

பக்தியானது அஷ்டாங்க யோகங்களின் உட்பிரிவுகளான ஜப, அஜப

கிரியை, பக்தி என்னும் நால்வகை யோகங்களில் கடைசியில் உள்ளது. இது ஒன்பது விதங்களாக அனுஷ்டிக்கப்படும். 1 சிரவணம், 2 கீர்த்தனம், 3 ஸ்மரணம், 5 அர்ச்சனை, 6 தாசியம், 7 வந்தனம், 8 சக்கியம், 9 ஆத்மநிவேதனம் என்னும் வழிகளே அவை.

இந்த ஒன்பது வித பக்திகளும் அதிகாரி பேதங்களை ஒட்டிக் கூறப்பட்டது. இதைத் தவிர பரமார்த்திக பக்தி என்றும் ஒன்றுண்டு. அதாவது வேதோபநிஷத்துக்களில் சொல்லிய மகா வாக்கியங்களின்படி அந்தப் பரப் பிரம்மமே தானாகையினாலே தனக்கு அன்னியமாய் யாதொரு பொருளும் இல்லையென்றும் அப்படிப்பட்ட தானான ஆத்மாவையே உபாசனை செய்தல் தக்கதென்றும் உபதேசித்துள்ளபடியால் ஆத்ம தத்துவ ஞானம் அடைந்தவர்கள் தானான ஆத்மாவை வேறே கதியில்லாமல் உபாசிக்கிறதே மேலான பக்தியென்றும் சுருதிகள் முதலானவை முறையிடுகின்றதை சுவாநுப மூலமாய் அறிந்து அநுஷ்டித்து பதமுத்தியடைந்திருக்கிறார்கள்.

பக்தியில் பரபக்தி, அபர பக்தி எனவும் இருவகை உண்டு. பரபக்தி என்பது— நிஷ்காமிய பக்தி; அதாவது உலகப் பொருள்களிடத்து இச்சை ஒழித்துப் பகவானிடத்தில் எதையும் வேண்டாது மோட்சப் பிராப்தியை மட்டும் இரந்து நிற்றல். அபர பக்தி - என்பது காமிய பக்தி; அதாவது தன தானியம் புத்திர பௌத்திரர்கள் முதலிய இக போகங்களை விரும்பியிருத்தல். இந்திரியங்களை வென்று பற்றற்று பகவானையும் பற்றற்ற பரமம் என்று ஆஸ்ரயிக்கும் துறவிகள் பரபக்தியுடையவர்கள். அபர பக்தர்கள் கேவலம் பகவானிடத்து வர்த்தகம் புரிபவர்கள்.

வேதாகமம் முதலிய நூற்கள் பக்தி மார்க்கங்களைப் பல விதமாகக் கூறியுள்ளன. அவை - துவிதம், அத்துவிதம், விசிட்டாத்துவிதம் என்னும் மூன்று பெரிய மார்க்கங்களின் பிரிவுகளாக முடிவுபெறும்.


# வி. சுந்தரநாடார்

(கதிர்காமத்திலும் மலைநாட்டிலும் சுத்தமான கடலை விநியோகஸ்தர்கள்)

## கடலை வியாபாரம்

16, அம்பகமுவா ரோட், நாவலப்பிட்டி.

# “ ஜயந்தீஸ் ”

எங்களிடம்

★ எல்லாவித ஜவுளிகளும் ★ சாப்புச் சாமான்களும்
★ பாட்டா சப்பாத்துக்களும்

C. W. E. பிடவைகளும் சகாயமான விலை யில் பெற்றுக் கொள்ளலாம்.

# நியூ ஜயந்தி ஸ்டோர்ஸ்

12, அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி.

---

## ஜயந்தி கிரைண்டிங் மில்ஸ்

கொச்சிக்காய், மசாலை, கோப்பி, கேப்பை, பயறு, சோளம், உளுந்து முதலிய தானியங்கள் குறிப்பிட்ட நேரத்தில் அரைத்துக் கொடுக்கப்படும்.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் வழங்கப்படும்

8, கம்பளை பின் வீதி, நாவலப்பிட்டி

## அம்பிகை ஸ்டோர்ஸ்

# AMBIGAI STORES

GENERAL MERCHANT.

Dealers in:

**Jaffna Best Cigars**

**Tobacco**

**Beedies etc.**

No. 54, Gampola Road,

Nawalapitiya.

---

## சு. சந்தோஷ நாடார் லிமிட்டெட்.

## S. Santhosa Nadar Ltd.,

Importers, Exporters,

General Merchants & Estate Suppliers.

*DEALERS IN:*

- EVERSILVER WARE
- ENAMEL WARE
- GLASS-WARE
- ALUMINIUM WARE
- STATIONERY
- FOODSTUFFS
- STRAWBOARDS

AND

- ALL KINDS OF PAPERS.

**No. 19, Kotmale Rd.,**

**NAWALAPITIYA**

*Head Office:*

No. 85, Prince Street,

COLOMBO-11.

---

PHONE: 350

## நெஷனல் ரேடிங் ஹவுஸ்

(சிதம்பரம்பிள்ளை அன் சன்ஸ்)

நிர். 9, அம்புகாம வீதி

நாவலப்பிட்டி.

எங்களிடம் எல்லாவிதமான

**இரும்புச் சாமான்களும்**

**கட்டிட தளபாடங்களும்**

மொத்தமாகவும் சில்லறையாகவும்

— சகாயமாக —

எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

---

## நவலங்கா இண்டஸ்ட்ரீஸ்

ஸ்தாபனத்தார் அளிக்கும்

## ஓர் நற்செய்தி!

ஈழத்து மக்களுக்கேற்ற

பிடவைகளுக்கு விரும்பிய

**கண்கவர் நிறங்களையும்**

அதில் பலவர்ண

அலங்கார வேலைப்பாடுகளையும்

அளிக்கும் ஒரே ஸ்தாபனம்

ந வ ல ங் கா இ ண் ட ஸ் ட் ரீ ஸ்

நிலையமேயாகும் என்பதை

ம கி ழ் வு ட ன்

தெரிவித்துக் கொள்கிறோம்.

49, கொத்மலை வீதி,

நாவலப்பிட்டி.

# சக்தியின் மகத்துவம்

(ஸ்ரீ மத். பரமானந்தவல்லி அம்மையார்)

அதிகாலையானதும் தாய் தன் குழந்தைகளை எழுப்பி வேலைகளைக் கற்பித்தும் பின் உண்டி உடைகளைக் கொடுத்தும் பாடசாலைக்கனுப்பியும் பின் அவர்கள் நன்மை தீமைகளைக் கவனித்தும் இரவு நேரத்தில் சுகமாய்த் தூங்கவைத்தும் பிழை வழி நடந்தால் அதட்டி அடித்தும் பின் அணைத்தும் சுகமாய் தூங்கும் போது பாதுகாத்தும் சாதாரண உலகத்தாய் ஒருத்தியே அந்த நேரத்தில் செயலாற்றுவதை நாம் பார்க்கின்றோம்.

அகிலலோக ஜனனியாகிய ஆதி பராசக்தி எல்லாச் சீவர்கட்கும் தாயார் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அப்பர தேவதையின் அருமை பெருமைகளை நன்குணர்ந்திருந்தும் அன்னையை அனுதினமும் அன்புடன் பூசை செய்பவர்கள் ஒரு சிலர் என்றுதான் சொல்லவேண்டும். பரப்பிரமரூபிணியாகிய அகண்டமாகிய அந்த ஒரேவஸ்துவிலிருந்து தான் லக்குமி சரஸ்வதி துர்க்கை என்றும் இன்னும் பலப்பல சக்திகளாகவும் மக்கள் வழிபாட்டிற்கு ஏற்ற பாங்கில் தோற்றியுள்ளாள். எல்லா ஈஸ்வரர்க்கும் ஈஸ்வரியாயிருப்பது மகா பராசக்தியாகிய அம்பிகை ஒருத்தியே என்பது சாஸ்திரப்பிரமாணம். எல்லாப்பஞ்சகிருத்யங்களும் அம்பிகையின் சக்தியினாலேதான் நடைபெறுகின்றன. சிவன் முதலான ஈஸ்வரர்களும், பிரமா, விஷ்ணு முதலிய தேவர்களும் இந்திரன் சந்திரன், சூரியன், குபேரன் ஆகியோரும், வஸிட்டர் அகத்தியர் வியாசர் ஆகிய முனிவர்களும், லோபா முத்திரை, வாகாம்பிரணீதேவி ஆகிய யோகினிகளும். மண்மதனாகிய காமனும் இன்னும் அளவிறந்த கிர்திய கர்த்தாக்களும் அம்பிகையின் பக்தி பூசனையால் பெறுதற்கரிய பேறுகளைப் பெற்றிருக்கிறார்கள். சர்வேஸ்வரியான ஜகன்மாதாவின் பாதகமலங்களையார் அனுதினமும் மனதாகிய தாமரை வனத்தில் நிறுத்தித்தியானம் செய்கிறார்களோ அவர்கள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று இறுதியில் மோட்சமாகிய வீட்டிற்கும் அதிகாரிகளாவார் என்பது உண்மையான முடிபு. அன்னையைப் பூசிக்கவோ வணங்கவோ வேண்டுமென்ற ஆர்வம் முற்சென்ம தவத்தால் தான் லபிக்கவேண்டும். தாயிடத்தில் குழந்தை போவதற்கு விதி விலக்கு என்பதில்லை. அதே பாங்கில் சர்வசீவ தயாபரியாகிய அன்னையைப்பூசிப்பதற்கு மன முருகிய அன்பு ஒன்றே போது மானது. அவளன்புக்காகப்பக்தி பண்ணினால் பக்தனின் தேவதைகளைப் பூர்த்தி செய்து வைப்பது அவளின் பொறுப்பு. பிள்ளையின் தேவையை தாய்தான் அறிவாள் தாய்க்கும் பிள்ளைக்கும் போன்ற இணக்கம் உலகில் வேறு ஒன்றுமில்லை எனலாம். இவ்விதமறிந்து மனங்குவிந்து பூசித்ததியானித்த பக்தர்களிடத்தில் சக்தியின் நித்திய சாந்நித்தியத்தைக் காணலாம். ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் சக்தியின் மகிமையினால் ஸவுந்தர்யலகரி என்னும் ஸ்தோத்திரப் பாடலடங்கிய நூறு ஸ்லோகங்களில் ஸ்ரீ வித்யா உபாசனைக் கிரமங்களையும் பக்தர்களிடத்து வைத்த கருணையால் ஒவ்வொரு ஸ்லோகத்திலும் அன்னையின் பெருமையை வர்ணித்து வழிபட வேண்டிய முறைகளையும் வேண்டியவாறு தந்திருக்கிறார்

கள். தாயை அனுபவித்த குழந்தை தாயைப் பற்றிச் சொல்லாதிருக்க முடியாது.

இனி புருஷரூபமான தேவதைகளுக்குப் பக்தர்களுக்குப் புக்தி முக்திகளை கைகளால்தான் கொடுக்க சக்தியுண்டு. சக்தி என்றபரதேவதைக்கோ பக்தர்கள் விரும்பும் பலனுக்கு மேலான புத்தி முக்திகளைக்கொடுக்கும் வல்லபம் ஸ்ரீ பாதத்திற் குண்டு. சக்தி அவர்களிடமிருந்தால் தானே கைகளால் அளிப்பார்கள் சக்தி அற்றவர்களானுல் கைகளாலும் ஒன்றையும் கொடுக்க முடியாது. சக்தி என்ற பர தேவதைக்கோ பக்தனுடைய அபிஷ்டத்தை நிறை வேற்ற மற்றவர்களின் உதவி வேண்டியதில்லை. தன்னுடைய ஸ்ரீ பாதத்தைத் தர்சனம் செய்தவர்கட்கு அதிகமான பலனை வர்சிக்கிருள். இதைக்கவனித்தால், சக்தி என்ற தேவதையே எல்லா வற்றிற்கும் மேலான தேவதை, என்பது வெளியாகிறது.

இனி ஸ்ரீ ராமாயணத்தில் சுக்கிரீவனும் ஸ்ரீராமனும் ஐக்யமானபின் தங்கள் தங்கள் விர்தாந்தங்களைச் சொல்லும் ஸந்தர்ப்பத்தில் சுக்ரீவன் ஸ்ரீ ராமனைப்பார்த்து ஸ்வாமிகள் கொஞ்சக்காலத்திற்கு முன் ராவணன் ஓர் உத்தமஸ்திரீயை அபகரீத்துக் கொண்டு புஷ்பகவிமானத்தில் தன் நகரத்துக்குச் சென்று கொண்டிருந்தான், நாங்கள் இந்தரிச்சயமுகபர்வதத்தில் எப்பொழுதுமே வசித்து வருங்காரணத்தால் மேலே சென்ற புஷ்பகவிமானத்தைக் கவனித்துப் பார்த்தோம். விமானத்திலிருந்த ஸ்திரீயானவள் எங்களைக்கண்டதும் சில வஸ்துக்கள் கட்டிய பீதாம்பரப் பொட்டணமொன்றைப் போட்டாள் உடனே நாங்கள் அதை அவிழ்த்துப் பார்த்த போது விலை மதிக்க முடியாத ஆபரணங்கள் அதில் இருந்தன. இதோ பாருங்கள். என்று ஸ்ரீ ராமனிடம் சுக்கிரீவன் கொடுத்தான். ஸ்ரீராமன் ஆவலோடு அவிழ்த்துப்பார்து விட்டு சீதையினுடைய தென்று அறிந்தும் அறியாதவன்போல் நடித்து லஷ்மணனைப் பார்த்து லஷ்மணு! இந்த ஆபரணங்கள் சீதையினுடையது தானு! என்று கேட்டார். லஷ்மணனே தேவியினுடைய பாதஷரத்தைப் பார்த்துவீட்டு சீதையினுடையது தான் என்று நிச்சயமாகச் சொன்ஞர். மற்ற ஆபரணங்களைப் பற்றித் தனக்குத் தெரியாது என்றும் சொன்ஞர். இவ்விதம் சொன்ன லஷ்மணனைப் பார்த்து பாதசரங்களை மட்டும் ஏன் அறிந்தாய் மற்றும் ஆபரணங்களை ஏன் அறியவில்லை. அதன் காரணம் என்ன என்று ஸ்ரீராமபிரான் கேட்க லஷ்மணன் சொன்னதாவது ராமா! நான் சகலவிதமான புருஷார்த்தங்களையும் அடைய பராசக்தியான தேவியின் பாதார விந்தங்களைத் தர்சனம் செய்யும் வழக்க மாகையால் மற்றப்பிரதேசங்களில் என் திருஷ்டி செல்வதில்லை என்று சொல்லி விட்டார்.

இதனுல் தேவியினுடைய சரணுரவிந்தங்களின் மகிமை ஸ்பஸ்டமாகப் பிரகாசிக்கின்றது என்பதில் ஐயமில்லை. ஸ்ரீராமனே ராமயணத்தில் தனக்குப் பிரதானமில்லை. சீதா கோவிலுக்குத் தான் பிரதானம் என்று ஒப்புக்கொண்டார். வால்மீகி மகரிஷியும் அதையே ஒப்புக்கொண்டார். பராசக்தியை ஆண் பெண் இருபாலரும் பூசிக்கத்தகுந்தவர்கள். சுவாசி நிகழும் சுமங்கலிகளும் பூசிப்பதை அம்பிகைக்கு அதிகப் பிரிதி என்று ஸ்ரீ லலிதா ஸகஸ்ரநாமங்களில் சொல்லியிருக்கு. இவ்விதம் தாயாகிய அம்பிகை விதிவழி பூசித்து எல்லோரும் கருணை வடிவானதாய் மைக் குணமாகி தாமும் நாடும் நலம் பெறுவார்களென்று ஸ்ரீ அம்பிகையைப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் சத் சாந்தி

T'phone: 376

# *Mahalingam Jewellery House*

MANUFACTURING JEWELLERS

*No. 51, KOTMALE ROAD,* *NAWALAPITIYA.*

## மகாலிங்கம் ஜுவல்லரி ஹவுஸ்

**அழகுக்கு அழகு செய்யும்**

**தங்க வைர நகைகள்**

நவீன டிசைன்களில்
சிறந்த வேலைப்பாடுகளுடன்
குறித்த காலத்தில் செய்து தரப்படும்.
நம்பிக்கைக்கும் உத்தரவாதத்திற்கும்
சிறந்த இடம்

இன்றே விஜயம் செய்யுங்கள்!

நிர் 51, கொத்மலை ரோட், நாவலப்பிட்டி.

---

பிடவை விற்பனைக்கு புகழ் பெற்ற ஸ்தாபனம்

## S. P. சதாசிவம் பிள்ளை அன் கோ.

வொயில், டெக்கா, எலிகன்
எலைட், காஸ்மீர், காஞ்சிபுரம்
சாரிகளும், பலவித சீத்தைகளும்
சூட்டிங், சேட்டிங், டசூர், பப்ளின்
நைலோன், டெக்ரோன், புளூ
ஆகிய பிடவைகளும்
சாப்புச் சாமான்களும்
குறைந்த விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயம்செய்து உண்மையை உணருங்கள்

நிர் 9, அட்டன் ரோட் கினிகத்தேனை

# ஆலயத்தின் அற்புதங்கள்

[பண்டிதை — தங்கம்மா அப்பாக்குட்டி]

"ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்பது சிவஞானபோதம். அரன் எல்லாவற்றிலும் பெருமையும் தூய்மையும் உடையவன். அதுபோல அவன் எழுந்தருளியுள்ள ஆலயங்களும் பெருமையும் தூய்மையும் உடையதாய் இருக்க வேண்டும். ஒரு ஊருக்கு உண்மை அழகையும் ஒளியையும் கொடுப்பன ஆலயங்களே. இதனாலேயே "திருக்கோவில் இல்லாத ஊர் அடவி காடே" என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார். நாட்டிலே தெய்வீக ஒளி பரவ வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நமது முன்னோர் ஆலயங்களைக் கட்டினார்கள். கட்டியதுமல்லாமல் அவை நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றும்விரும்பினார்கள். தென்பாண்டி நாட்டில் மிகச் சிறப்போடு ஆட்சி செய்தவன் பராக்கிரம பாண்டியன். அவன் எழுப்பிய தென்காசி விசுவநாதர் கோயில் மிகச்சிறப்பு வாய்ந்தது. அக்கோவிற் கல்வெட்டிலே பொறிக்கப்பட்ட செஞ்சொற்கள் நம்மால் உச்சிமேற்கொள்ளக் கூடியவை. அவை பின் வருமாறு :

"ஆராயினும் இந்தத் தென்காசிமேவும் பொன்னாலயத்து
வாராத தோர் குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராகவே யொழித்துப் புரப்பார்களை நீதியுடன்
பாராரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே"

இதிலிருந்து எமது முன்னோர்களின் உயர்ந்த தெய்வீக உள்ளம் நமக்குப் புலனாகிறது.

பார்க்கும் இடமெங்கணும் நீக்கமற நிறைந்தவர் கடவுள் என்ற தத்துவத்தை உணர்ந்தவர்களால் தான் ஆலயத்திலும் கடவுளைக் காணமுடியும். அங்குள்ள விக்கிரகங்களைக் கடவுளாகக் காணக்கூடியவர்களே ஆலயத்துக்கு வெளியிலும் கடவுளைக் காண்பவராவர். "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரந் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்கிறார் மணிவாசகர். எனவே அருவமான கடவுளுக்கு உருவம் கற்பித்து வழிபட்டவர்கள் தமிழர்கள். அவர்களுடைய அன்றாட வாழ்க்கை அல்லல்களிலிருந்து மனதைக் கட்டவிழ்த்து ஓய்வையும் உண்மை வாழ்வையும் அனுபவிக்க ஆலயம் இடந்தருகிறது.

ஈசனைப்பற்றிய ஞானம் பெற்றவராயினும் அவர்களுக்கென ஒரு வழிபாட்டுமுறை அவசியமாகும். அதற்கு ஆலயமே வேண்டப்படுகிறது. மூன்று வயதிலேயே ஞானம் பெற்ற சம்பந்தர் கூட இருநூறுக்கு மேற்பட்ட தலங்களுக்குச் சென்று வழிபட்டார் என்பதை அறியும்போது ஏனையோர்க்கு இது எத்துணை அவசியம் என்பதைக் கூறவேண்டியதில்லை. அகங்கார மமகாரங்கள் சிறிது நேரமாவது ஆலயத்தில் நம்மைவிட்டு அகன்று விடுகின்றன. இறைவனுக்கு முன்னால் நாம் மிகவும் அற்பமானவர்கள் என்ற எண்ணம் உண்டாகிறது.

நமது நாட்டில் பலர் உருவவழிபாட்டை வெறுக்கின்றனர். ஆனால் மனவொருமைப் பாட்டுக்கு உருவமே அவசியமாகும். இந்த நன்னோக்கத்துடனேயே தமிழ்நாட்டில் பல ஆலயங்கள் தோன்றின. இவை தமிழனுடைய பண்டைப் பெருமைக்கு சான்று பகர்வனவாகும்.

அடுத்ததாக ஆலயங்கள் தோன்றிய வரலாற்றைக் கவனிப்போம். ஆதியிலே மனிதன் பகுத்தறிவின்றி காட்டிலே திரிந்து கொண்டு இலை, தழை முதலியவற்றை அணிந்து கொண்டும் காய் கனி கிழங்குகளை உணவாகக் கொண்டும் வாழ்ந்தான். முதலில் தீயின் பயனை உணர்ந்தான், அதை வணங்கினான். பின்பு காலஞ் செல்லச் செல்லக் கடவுளன்பு தானே உதித்தது. இதன் பயனாகவே ஆலயங்கள் எழுந்தன. ஆண்டவனும் அடியார்க்கெளியவனுகையால் தமது தத்துவப்பொருளை அவர்களுக்குத் தோற்றுவித்து அன்பர்கள் இதயத்தில் இடங்கொண்டான். பூசலார் நாயனார் என்பவர் ஈசற்குத் தமது மனதில் கோயில் கட்டிக் குடமுழுக்கும் செய்ய நாள் குறித்தார். அதே நாளில் கழற்சிங்கனும் தான் கட்டிய கோயிலைப் பிரதிட்டை செய்ய நாட் குறித்திருந்தான். பக்தி வலையில் அகப்படுவோனாகிய எம்பெருமான் கழற்சிங்கன் கனவிலே தோன்றி,

நின்ற ஊர்ப் பூசல்அன்பன் நெடிது நாள் நினைந்து செய்த
நன்று நீடாலயத்து நாளைநாம்புகுவோம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில் கொண்டருளிப்போனார்

இந்த உண்மைத் தத்துவத்தைக் கொண்டே உள்ளம் பெருங்கோயில் எனப் பாடப்பட்டது. மானிட உயிர் தங்குவதற்கு அவனது உடம்பும் ஐம்புலன்களும் அமைந்துள்ளவாறு போல எங்கும் நிறைந்த பரம் பொருளுக்கு ஒரு கோயில் அமைத்து உருவகம் செய்தனர்

''உள்ளம் பெருங் கோவில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே''

இவ்வாறு எழுந்த தமிழக்கோயில்கள் எண்ணிறந்தன இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட

பிறவா யாக்கைப் பெரியோன் கோவிலும்
ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால் வளை மேனி வாலியோன் கோவில்
நீல மேனி கொடியோன் கோவிலும்
மாலை வெண் குடை மன்னவன் கோவிலும்

என்பது சிலப்பதிகாரம். இவை நாளடைவில் பலகிப் பெருகின. பின்பு பல்லவர் காலத்திலும் பிற்காலச் சோழர் காலத்திலும் கோயில்கள் பெருகின.

கோயில் அமைப்பில் கருவறை, அர்த்த மண்டபம், மணி மண்டபம் மகா மண்டபம், முன் மண்டபம் என்பனவும் கொடி மரம், பலிபீடம், தெப்பக்குளம் தீர்த்தக் கிணறு என்பனவும் பிரகாரங்களில் நந்தவனம் வாகன அறைகள், சமயலறை, களஞ்சியம், தேர்மேடு என்பனவும் உண்டு. மூன்று வீதிகளைக் கொண்ட ஆலயம் தூல சரீரம், சூக்கும சரீரம், காரணசரீரம் என மூன்று வகையுள்ள உடம்பைப் போன்றது

நாவல் நகரின் ஒரே ஒரு நாகரீக ஸ்தாபனம்

# கொழும்பு ஸ்டோர்ஸ்

தங்களின்

திருமணம், மற்றும் இதர கொண்டாட்டங்களுக்கும் வேண்டிய

லங்கா

மணிப்புரி சேலைகள் கைத்தறி பிடவைகள் மற்றும்

C. W. E. பிடவைகளுக்கும் சிறந்த இடம்

## கொழும்பு ஸ்டோர்ஸ்

38, கொத்மலை வீதி — — நாவலப்பிட்டி.

*Also Authorized Dealers For:* **Bata** *Shoes*

## எஸ். பி. தங்கவேல்

★

நகை ஈடு பிடிக்குமிடம்

★

30, கொத்மலை வீதி,

நாவலப்பிட்டி.

## S.
## கருப்பையா பிள்ளை

★

நகை ஈடு பிடிக்குமிடம்

★

27, கொத்மலை வீதி,

நாவலப்பிட்டி.

ஆரம்பம்: 1931 Estd: 1931

# க. வீரலிங்கம் ஆச்சாரி

## நாவலப்பிட்டி.

மலையகத்திலே 35 வருடங்களாக மங்காபுகழுடன் விளங்கும்
ஒரே நகை மாளிகை,

★ தற்கால நவநாகரீகத்திற்கேற்ற வேலைப்பாடுகளுடன்
கூடிய தங்க நகைகளை உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். ★

FOR QUALITY JEWELLERY:

# K. VEERALINGAM ACHARY

MANUFACTURING JEWELLER.

37, Kotmale Road, NAWALAPITIYA

---

# ஸ்ரீ குமரன் ஸ்டோர்ஸ்

எங்களிடம்:

திறம் யாழ்ப்பாண சுருட்டு
புகையிலை, நல்லெண்ணை
சாப்புச் சாமான்களும், சபா
பீடி, ரத்தினு பீடி, செடி பீடி
சபாரத்தினு பீடி
சபாஸ் பத்திகளும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் சகாயமான விலைக்கு கிடைக்கும்.

1, கம்பளை ரோட் ::: நாவலப்பிட்டி.

*IF IT'S QUALITY*
*YOU ARE WAITING IN*

Hardware &

Estate requirements

*LET YOUR FAVOURITE PLEASE BE*

## RAMWHYTE & Co.

39, Main Street.
HATTON.

Dial: 355 Cable: Whyte Co.

## NIYAS Jewellery

(Prop: S. M. IBRAHIM)

*DEALERS IN:*

**Gold & Silver Jewelleries**
**&**
**Gold Covering**

நியாஸ் ஜுவலரி

No. 2A, Ambagamuwa Rd,
Nawalapitiya

## M. SINNADURAI,

GENERAL MERCHANT &
NEWS AGENT.

*Dealer in:*

★ Best Jaffna Cigars

★ Tobacco

&

★ Oilman Stores

14, Hatton Road,
GINIGATHENA

## பாலசுப்பிரமணிய ஸ்டோர்ஸ்

வெங்கலம்

அலுமினியச் சாமான்களும்

மணிச் சாமான்களும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

62, மெயின் வீதி, அட்டன்

தொலைபேசி: 343

MADRAS

கல்யாணமா, பிறந்த நாளா, பள்ளிதிறக்கும் நாளா, தீபாவளிப் பண்டிகையா, பொங்கல் திருநாளா, நத்தார்ப் பண்டிகையா, தமிழ் சிங்கள புதுவருடமா

## காரணம் எதுவாகிலும் உங்களுக்கு ஜவுளிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும்

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உயர்ந்த புதுரக ஜவுளிகளைத் தெரிவு செய்வதற்கும் போட்டா போட்டி விலையில் ஜவுளிகளை வாங்குவதற்கும்

## புகழ்வாய்ந்த ஸ்தாபனம்

# சாரதாஸ்

45, கம்பளை வீதி, நாவலப்பிட்டி.

196, மெயின் வீதி, கொழும்பு - 11.
தொலைபேசி: 2740 தந்தி: கஸ்தூரி

96, 98, யோர்க் வீதி, கொழும்பு-1.

## அறுசுவை உண்டிக்குச் சிறந்த இடம்

- ★ சாலச் சிறந்த உணவு
- ★ உற்சாகம் தரும் குளிர்பானம்
- ★ விதம் விதமான சிற்றுண்டிகள்
- ★ நிறைந்த திருப்தி
- ★ அன்புடன் உபசரிப்பு

அத்தனையும் செய்யக் காத்திருக்கிறது

# சந்திர விலாஸ்

44, கம்பளை வீதி :::: நாவலப்பிட்டி.

★

இன்றே விஜயம் செய்யுங்கள்!

★

விருந்து வைபவங்களுக்குரிய ஆடர்கள் விசேஷமாகக் கவனிக்கப்படும்.

அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் – நாவலப்பிட்டி. போன்: 353.